# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021–2022

### மானியக் கோரிக்கை எண். 36

## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

### நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | முக்கிய நடவடிக்கைகள் | 6 |
| 3. | துறையின் செயல்பாடுகள் | 12 |
| 4. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | 12 |
| 5. | ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பது | 42 |
| 6. | சிறப்பு முயற்சிகள் | 51 |
| 7. | இருபது அம்சத் திட்டம், 2006 | 52 |
| 8. | துறைத் தலைவர்கள் | 54 |
| 9. | மாநில திட்டக்குழு | 55 |
| 10. | பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை | 93 |
| 11. | மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை | 168 |
| 12. | சென்னை மெட்ரோ இரயில் திட்டம் | 182 |

# மானியக் கோரிக்கை எண்.36

## திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை**

***"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை***

***ஆராய்வான் செய்க வினை"***

***(திருக்குறள் 512)***

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல், ஆகியவை திட்டம் மற்றும் வளர்ச்சி துறையில் முதன்மை பொறுப்புகளாக ஆரம்பக் காலத்தில் இருந்தன. மத்திய திட்டக்குழு கலைக்கப்பட்டு, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக

சேர்க்கப்பட்டதால் இத்துறையின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ் நாட்டில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் இலக்கு நிர்ணயித்தல், இடைப்பட்ட காலங்களில் செயல்படுத்த தேவையான வளர்ச்சி சார்ந்த திட்டங்களை முன்னிலைப்படுத்தல் மற்றும் அம்முயற்சிகளில் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகிய மாற்றங்களை உருவாக்குவதே இத்துறையின் பங்காகும். நிர்வாகத் துறைகளால் தயார் செய்யப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் மாநிலத் திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை பயன்படுத்தியும் கொள்கைகளை வகுக்கிறது. மேலும், இத்துறை மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான நித்தி ஆயோக் (NITI Aayog) உடன் கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாகும்.

தற்பொழுது, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு, மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக, நித்தி ஆயோக் (NITI Aayog) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், முதன்மையான நோக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறை நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறியீடுகளை அடைவதற்கு, வருங்காலத்தில் உலகத் தரத்திற்கு சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல்

காரணிகளை அடைய மற்ற துறைகளுடன் இணைந்து செயலாற்றுகிறது.

இத்துறை நித்தி ஆயோக் (NITI Aayog) உடன் ஒருங்கிணைந்து கலந்துரையாடும் மற்றும் பிரகதி மற்றும் இ–சமிக்ஷா–வுக்கான மாநில அரசின் முகமைத் துறையாகும். பிரகதியின்கீழ் (PRAGATI–Pro–Active Governance and Timely Implementation) மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் உயர் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னோடி திட்டங்களை நேரடியாக விவாதித்து அறிந்து கொள்கிறார். மேலும், அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு பணிகளையும், துறைகளிடமிருந்து பெறப்படும் பொருண்மைகள் குறித்த நடப்பு நிலையைப் பிரகதியின்கீழ் (PRAGATI) பதிவேற்றம் செய்கிறது.

மாநில திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை பயன்படுத்தியும் கொள்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்குகிறது. மேலும், தமிழ்நாடு புத்தாக்க முயற்சி வழியாக ஆதாரங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகளுக்கு திட்டச் செயலாக்கம் அளிக்கிறது.

மேலும், சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் மேற்பார்வையிடப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் மற்றும் சில புதிய சிறப்பு முயற்சிகளாக (New Special Initiatives) முக்கியமான உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

துறையின் வலைத்தளமான www.tn.gov.in/department/23–இல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

**1.0 முக்கிய நடவடிக்கைகள்**

i. நீண்டகால செயல் உத்திகளை செயல்படுத்துதல் மற்றும் இடைப்பட்ட கால செயல்பாட்டுத் திட்டமிடுதலை நடைமுறைப்படுத்துதல்;

ii. நித்தி ஆயோக் (NITI Aayog) அமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;

iii. மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் வாயிலாக நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்து குறிப்பான திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், காற்றுமாசடைதல், புவி

வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்;

iv. நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030–ல் அடைய மாநில அரசின் முயற்சிகளுக்கு அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை கண்காணித்தல்;

v. வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

vi. முன்னேற விழையும் மாவட்டங்களை மாநில அளவில் ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்;

vii. பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் அடிப்படையில்

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக செயல் படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தல்;

viii. தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டங்களைப் பரிந்துரை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்;

ix. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

x. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களின் தயாரிப்பினை மேற்பார்வையிடுதல்;

xi. பல்வேறு அரசுத் துறைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும்

புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்;

xii. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலாளர் அவர்களால் சீராய்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல்;

xiii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றாக மாநில நிதியிலிருந்து சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்;

xiv. வளர்ச்சித் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு

மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலமாக மதிப்பீடு செய்தல்;

xv. மாநில திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல் படுவதற்கான நிர்வாக வசதிகள் செய்தல்;

xvi. இருபது அம்சத்திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் செயலாக்கம் குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் தொகுத்தல்;

xvii. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு

ஆய்வுகள், வயது முதிர்ந்தோரின் வாழ்வாதாரம் குறித்த ஆய்வு, மாநில பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலம் பொது மற்றும் தனியார் துறைகளிடமிருந்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல்;

xviii. சிறப்பு முயற்சிகள் பிரிவின் கீழ் 'மெட்ரோ இரயில் திட்டம்' போன்ற புதிய மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்; மற்றும்

xix. புதிய சிறப்பு முயற்சிகளாக முக்கியமான உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

## 2.0 துறையின் செயல்பாடுகள்

### 2.1 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

➢ **முகவுரை**

2030 ஆம் ஆண்டிற்கான நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs) 2015–க்கான புத்தாயிரம் வளர்ச்சி இலக்குகளிடமிருந்து பெறப்பட்டது. பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவற்றுடன் சுற்றுசூழல் நிலைத் தன்மையையும் முக்கியமான நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு உலகளாவிய மாநாடுகளின் தொடர்ச்சியான விவாதத்தின் அடிப்படையில், இந்த நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 2015ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொது சபையில் இந்தியா உட்பட 193 நாடுகள், 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள் மற்றும் 300 உலகளாவிய குறிகாட்டிகளுடன் 01.01.2016இல்

நடைமுறைக்கு வந்த நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்கினை ஏற்றுக் கொண்டன.

2020ஆம் ஆண்டு முதல் 2030 வரையிலான பத்தாண்டு காலம், செயல்பாட்டிற்கான பத்தாண்டு காலமாக (தசாப்தமாக) அறிவிக்கப்படுவதுடன், வறுமை மற்றும் பாலினச் சமத்துவம் முதல் பருவ நிலை மாற்றம், சமத்துவமின்மை மற்றும் நிதிப்பற்றாக்குறை உள்ளிட்ட, உலகத்தின் மிகப்பெரும் சவால்களை எதிர்கொள்வதற்கான நீடித்த தீர்வை எய்துவதற்கான வழிவகைகளை துரிதப்படுத்துதலை முன்னிறுத்துகிறது. இருப்பினும், உலகம் தழுவிய கொரோனா தொற்று பரவல், இப்பணிகளை துரிதப்படுத்துதலுக்கு மாறாக, உலகின் பல்வேறு நாடுகளை, குறிப்பாக சமூகம் மற்றும் பொருளாதார காரணிகளில், மிகவும் பாதகமான நிலைக்கு தள்ளியுள்ளது. இந்தியாவின் நீடித்த வளர்ச்சி

இலக்குகளுக்கான தேசிய தன்னார்வ ஆய்வு 2020–இல், கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக இந்தியாவில் வளர்ச்சிப் பணிகளுக்கான வேகம் சீர்குலைந்தது என்பதும் இதன் மூலம் மிகப்பெரிய அளவு சவால்கள் எதிர் கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனினும், வலுவான, ஒருங்கிணைந்த எதிர் வினையாற்றக்கூடிய அமைப்பை உருவாக்குதற்காக குடிமை சமுதாயத்துடனும், தொழில் துறையுடனும் கூட்டாண்மையை உருவாக்கியுள்ள மாநிலங்கள் மற்றும் தேசத்தின் மெச்சத்தக்க நெகிழ்வு திறன் ஆகியவை இத்தருணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.1.1 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் 5 முக்கிய கொள்கைகள்

**மக்கள்**

வறுமை மற்றும் பசியை அவற்றின் அனைத்து வடிவங்களிலும் பரிமாணங்களிலும் முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், அனைத்து மனிதர்களும் கண்ணியத்திலும், சமத்துவத்திலும், ஆரோக்கியமான சூழலிலும் தங்கள் ஆற்றலை நிறைவேற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துதல்.

**புவி**

புவியினை சீரழிவிலிருந்து பாதுகாக்க நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி அதன் இயற்கை வளங்களை நிலையான முறையில் நிர்வகித்தல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த அவசர நடவடிக்கை எடுப்பதன் மூலம் இக்கால மற்றும் எதிர்கால தலைமுறையினரின் தேவைகளை பூர்த்தி செய்தல்.

**செழுமை**

அனைத்து மனிதர்களும் வளமான, நிறைவான வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்பதனை உறுதி செய்தல் மற்றும் பொருளாதார, சமூக, தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை இயற்கையுடனான நல்லிணக்கத்துடன் நடைபெறுதல்.

**அமைதி**

பயம் மற்றும் வன்முறையற்ற அமைதியான, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை உருவாக்குதல். அமைதியில்லாமல் நிலைத்த வளர்ச்சியினையும், நிலைத்த வளர்ச்சியில்லாமல் அமைதியையும் எட்ட இயலாது.

**கூட்டாண்மை**

உலகளாவிய ஒற்றுமையை வலுப்படுத்தும் மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்ட நிலையான அபிவிருத்திக்கான புத்துயிர் பெற்ற

உலகளாவிய கூட்டாண்மை குறிப்பாக ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களின் தேவைகள், அனைத்து நாடுகள், பங்குதாரர்கள், மக்களின் பங்களிப்பின் மூலம் இந்த வளர்ச்சிக்கான இலக்குகளை செயல்படுத்த தேவையான வழிமுறைகளை திரட்டுதல். எவர் ஒருவரும் விடுபடாவண்ணம் அனைவருக்கும் வளர்ச்சியை உறுதி செய்தலே நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முக்கிய அம்சமாகும்.

### 2.1.2 உலக அளவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட ஆண்டு தோறும் ஐக்கிய நாடுகளின் பொது மன்ற மாநாடு கூட்டப்படுகிறது. அனைத்து நாடுகளின் அடைவுகள் தரவுகள் வாயிலாக கண்காணிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள்

ஒவ்வொரு ஆண்டும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் அறிக்கையை வெளியிடுகிறது.

2021–ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையின்படி, 162 உலக நாடுகளில் இந்தியா 60.1 மதிப்பெண்களுடன் 120 ஆவது நிலையில் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உலகளாவிய குறிகாட்டிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு இத்தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு நாடும் தாம் மேற்கொண்ட முயற்சிகளையும், அடைந்த முன்னேற்றத்தினையும், தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் அவையின் உயர்நிலை அரசியல் குழுவில் சமர்ப்பிக்கிறது. ஐக்கிய நாடுகளின் இம்முயற்சி உலக நாடுகளுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய மேற்கொண்ட முயற்சிகளை மற்ற நாடுகளுக்கு தெரிவிக்கும் வாய்ப்பாக அமைகிறது.

### 2.1.3 இந்தியாவும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

இந்தியாவில் இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்தும் முகமையாக நித்தி ஆயோக் செயல்படுகிறது. நித்தி ஆயோக் அமைப்பு இந்தியாவிற்கான தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கையை தயாரிக்கிறது. நித்தி ஆயோக் அனைத்து இந்திய மாநிலங்களுடன் இணைந்து நீடித்த வளர்ச்சி இலக்குகளை நம்நாடு அடைவதற்கு பல செயல்பாடு களை முன்னெடுத்து வருகிறது. 169 குறிக்கோள்களை அடைவதற்கு தேசிய அளவிலான 306 குறிகாட்டிகள் கண்டறியப்பட்டுள்ளன.

நித்தி ஆயோக் அமைப்பு 2018–இல் வெளியிட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா அடிப்படை அறிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட 13 இலக்குகளில் 39 குறிக்கோள்களுக்கான 62 குறிக்காட்டிகளின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டது. டிசம்பர் 2019–இல் வெளியிடப்பட்ட

நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீட்டு அறிக்கை 2.0, 16 இலக்குகளின் 54 குறிக்கோள்களுக்கு உட்பட்ட 100 குறிகாட்டிகளை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு அறிக்கைகளிலும் தமிழ்நாடு தரவரிசைப் பட்டியலில் 3–வது இடத்தில் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய தரவரிசை குறியீடு 2021–இல், 74 மதிப்பெண்களுடன் தமிழ்நாடு அகில இந்திய அளவில் இரண்டாம் நிலையில் உள்ளது.

இதற்கான தரவுகள் மத்திய அமைச்சகங்களின் இணைய வாயில்களிலிருந்தும், இரண்டாண்டு / மூன்றாண்டு / ஐந்தாண்டு கால இடைவெளிகளில் நடத்தப்படுகிற மாதிரி ஆய்வுகளிலிருந்தும் பெறப்படுகின்றன. டிசம்பர் 2019–இல் நித்தி ஆயோக் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதள பலகையை

நிறுவியுள்ளது. மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகம் பல்வேறு குறிகாட்டிகளுக்கான தரவுகளை சேகரித்து இதற்கென நிறுவப்பட்டுள்ள ஒரு இணைய தளத்தில் அட்டவணைப்படுத்தி வருகிறது.

முன்னேற்றத்தை விரைவு படுத்தவும், தொடர்ந்து மேம்பாடு அடைவதற்கும், தொடர்ந்த கண்காணிப்பும், கூட்டு முயற்சியும் இன்றியமையாதவை. இந்தியா நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு மாநிலத்தின் பங்கேற்பும் அவசியமானதாகும்.

### 2.1.4 தமிழ்நாடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

தமிழ்நாடு அரசு, அதனுடைய அடிப்படை கொள்கையான "அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச் செய்தல்" என்பதை செயல்படுத்துவதில் உறுதியுடன் உள்ளது. மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, பல்வேறு மக்கள்

நலப்பணிகளுக்கான முயற்சிகளை செயலாக்கி வருகின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பல்வேறு வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஏற்படுத்த இயலுவதோடு, செழிப்பான தமிழகத்தை உருவாக்க இயலும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளில் ஒருவரும் விடுபடா வண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதில் கவனம் செலுத்துவதும் மற்றும் செயல்பாட்டிற்கான பத்தாண்டு காலத்திற்கான வளர்ச்சிக்கான பணிகளும் மற்றும் அதற்கான முன்னேற்றப் பணிகளும் ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான வரையறையுடன் பொருந்தியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய விடியலுக்கான தொலைநோக்கு ஆவணத்தில், பொருளாதாரம், வேளாண்மை, நீர் ஆதாரம், கல்வி

மற்றும் வேலைவாய்ப்பு, மருத்துவம், நகர்ப்புற வளர்ச்சி, உயர்தர ஊரக கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சமூக நீதி ஆகிய ஏழு பெரிய துறைகள் கண்டறியப் பட்டுள்ளன. மாநிலம், அதன் துரிதப்படுத்தப்பட்ட, முழுமையான மற்றும் மாநிலத்தில் எவரும் விடுபடாவண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றில் வேட்கையுடன் இருக்கும் போது நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ்வரும் 16 இலக்குகளும் தானாகவே எய்தப்பட இயலும்.

அனைத்து துறைகளும் தத்தம் கொள்கை விளக்கக் குறிப்பில் தமக்கு தொடர்புடைய நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விளக்கம் இடம்பெற வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டன. மேலும், தமிழ்நாடு அகில இந்திய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் முதல் இடத்தை பெறுவதோடு, உலக அளவில் தனது தரத்தை மேலும் உயர்த்தும் வண்ணம் அனைத்து

துறைகளும் ஒன்றிணைந்து தமது செயல்பாட்டினை மேம்படுத்த வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உலகநாடுகள் முழுமையாக எய்துவதற்கு இந்தியாவும் அதனை முழுமையாக அடைய வேண்டும். இந்தியா இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழகம் அனைத்து இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைவதில் முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும்.

### 2.1.5 செயல்பாட்டிற்கான அமைப்பு முறை

தமிழகத்தில், நீடித்த வளர்ச்சி இலக்கின் முன்னேற்றத்தை கண்காணிக்கும் பணி, அரசு தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் முகமை துறைகளின் செயலர்கள் உறுப்பினர்களாக உள்ள உயர் அதிகாரக் குழு அளவில் மேற்கொள்ளப்படுகிறது. திட்டம் மற்றும்

வளர்ச்சித் துறையானது, அனைத்து துறைகளிலும் நீடித்த வளர்ச்சி இலக்கின் செயலாக்கத்தின் கண்காணிப்பில் ஒருங்கிணைப்பு அமைப்பாக உள்ளது. இதன் கீழ்வரும், மாநில திட்டக் குழு, இப்பொருள் தொடர்பான, கொள்கை அளவிலான விவாதங்களின் மூலம் அரசுக்கு கருத்துரு வழங்கும் பொறுப்பினையும், பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறையானது, நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான தரவுகளை பெறுவது, ஒருங்கிணைப்பது தொடர்பான பணிகளுக்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. இவ்வாறு, மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்கு தொடர்பான பணிகளுக்கான நிறுவனம் சார்ந்த அமைப்பு முறையை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

அ) அரசு தலைமைச் செயலர் தலைமையில் மற்றும் துறைச் செயலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்

அதிகாரக்குழு இதுவரை 3 முறை கூடி மாநிலத்தின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்துள்ளது.

ஆ) எட்டு கருப்பொருட்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பணிக்குழுக்கள் தொடர்புடைய துறைச்செயலர்களின் தலைமையின்கீழ் இதர துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் உயர் அதிகாரக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய பணிகளை செய்து வருகின்றன. இப்பணிக் குழுக்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிவரன் முறைக்கேற்ப பலமுறை சந்தித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

எட்டு கருப்பொருள் சார்ந்த பணிக் குழுக்கள், இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் தொடர்புடைய மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசின் திட்டங்களை தொடர்பு படுத்துதல், குறிகாட்டிகளை வரையறை செய்தல், நீடித்த வளர்ச்சி இலக்கில் மாநிலத்தில் முழுமையான முன்னேற்றத்தை எய்துவதற்காக இலக்குகளையும் குறிக்கோள்களையும் கண்காணிப்பது மற்றும் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பது ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

தமிழகத்தில் துறை தோறும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதற்கும் மாநிலத் திட்டக் குழுவிற்கு அவை குறித்த தரவுகளும், உள்ளீடுகளும் அளிப்பதற்கும் ஏதுவாக துறைகளுக்கான நீடித்த வளர்ச்சி அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட அளவில் நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான குழுக்கள் / அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான ஒரு உயர்நிலைக் குழுவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட செயற்குழுவும் மற்றும் மாவட்ட அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அந்தந்த மாவட்ட அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கு வேண்டிய பணிகளும் ஆய்வுக் கூட்டங்களும் இக்குழுக்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்கின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கான, மாநில அளவிலான குறிகாட்டிகளும், மாவட்ட அளவிலான குறிகாட்டிகளும் மற்றும் வட்டார அளவிலான குறிகாட்டிகளும் இறுதி

செய்யப்பட்டுள்ளன. குறிகாட்டி வரையறை இறுதி செய்யும் பணிகள் தொடர்புடைய துறைகள் பங்கேற்ற கலந்தாய்வு கூட்டங்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டும், எட்டப்பட வேண்டிய இலக்குகளும் துறைகளாலுமே உறுதி செய்யப்பட்டுள்ளன. இதன் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக, ஒரு இணையதள கண்காணிப்புப் பலகை நிறுவப்பட்டு அதில் குறிகாட்டிகளுக்கான தரவுகள் தொடர்புடைய துறைகளால் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

அடுத்த ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீட்டில் தமிழகம் அகில இந்திய அளவில் முதல் நிலையில் இருக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கும் வகையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இம்மாநிலம் 50 விழுக்காடு மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் நகரமயமான

மாநிலமாக உள்ளது. எனவே, நகர்ப்புறங்களிலும், மீள்குடியேற்ற பகுதிகளிலும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் நோக்குடன், மிகப் பெருமளவிலான மீள்குடியேற்ற திட்டங்களை உள்ளடக்கிய, நகர்ப்புற குறிகாட்டி வரையறையையும், மீள்குடியேற்ற குறிகாட்டி வரையறையையும் இறுதி செய்வதற்காக, உரிய துறைகளின் அலுவலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பங்கேற்புடன் பல்வேறு கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2.1.6 கண்காணிப்பு

உலகளாவிய குறிகாட்டிகளும், ஐக்கிய நாடுகள் அவையின் ஆண்டு அறிக்கையும், நாடுகளின் தரவரிசை பட்டியலும், முன்னேற்றத்தினை அளவிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தேசிய அளவில் நித்தி ஆயோக் அமைப்பு ஆண்டு

தோறும் வெளியிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான இந்திய குறியீட்டு அறிக்கைகள் வாயிலாக முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

எவை கண்காணிக்கப்படுகிறதோ அவையே கவனிக்கப்படுகிறது. எவை மதிப்பிடப்படுகிறதோ அவையே கவனத்தை ஈர்க்கிறது. மேலும் பங்கேற்பாளர்களிடையே போட்டியை ஏற்படுத்தி முன்னேற்றத்தினை விரைவுபடுத்த உதவி புரிகிறது என்பது கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

### 2.1.7 இணையதள கண்காணிப்புப் பலகை

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதள கண்காணிப்புப் பலகை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் வடிவமைக்கப்பட்டு பொதுப் பயன்பாட்டிற்காக நிறுவப்பட்டது. இது நீடித்த வளர்ச்சி இலக்கின் கீழ் அரசின் பல்வேறு திட்டங்களின் தரவுகளின் கண்காணிப்பிற்கும்

தரவுகளை காட்சியாக காணும் வகையிலும் தரவுகளை கையாளும் முயற்சியாகும். இந்த இணையதள கண்காணிப்பு பலகையின் வாயிலாக இலக்குகள் / குறிக்கோள்கள் / குறிகாட்டிகள் ஆகியவற்றின் நிகழ்நேர முன்னேற்றத்தை காண இயலும்.

இந்த இணையதள கண்காணிப்பு பலகையில் தொடர்ந்து தரவுகளை உள்ளீடு செய்வது அனைத்து துறைகளின் குறிப்பாக துறைகள் தோறும் ஏற்படுத்தப்பட்ட அலகுகளின் பணியாகும். இந்த இணையதள கண்காணிப்பு பலகையில் துறைகள் தாங்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளையும் பதிவிட இடமளிக்கப்பட்டுள்ளது. இந்த இணையதள கண்காணிப்பு பலகை தொடர்ந்து மெருகேற்றப்பட்டு அதிக தகவல்களை அளிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக அரசின் கொள்கை முடிவு எடுப்போர்,

ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த ஆர்வம் கொண்டோர் எளிய வகையில் ஆய்வு செய்யும் வண்ணம் புதுமையான காட்சிப்படுத்துதலையும், தரவுகளை தேடுவதற்கு தேவையான கலன்களையும் கொண்டுள்ளது.

மாவட்ட அளவில் முன்னேற்றத்தினை கண்காணிக்கும் வகையில் மாவட்ட அளவிலான தரவுகளையும் அளிக்கிறது. இதனைத் தொடர்ந்து மாவட்ட மற்றும் வட்டார அளவிலான தரவுகளை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது, மாவட்ட, வட்டார குறிகாட்டிகள் வரையறை இறுதி செய்யப்பட்டுள்ளது. பன்னாட்டு ஜெர்மன் கூட்டமைப்புடன் (GIZ) இணைந்து நகர்ப்புறங்களுக்கான குறிகாட்டிகள் வரையறை மற்றும் மீள் குடியேற்ற குறிகாட்டிகள் வரையறை இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளது.

### 2.1.8 பகுப்பாய்வுகள் மற்றும் அறிக்கைகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாநில / மாவட்ட / வட்டாரக் குறிகாட்டிகள் வரையறைக்கான தரவுகளை பகுப்பாய்வு செய்வதும் மேலும் முன்னேற்றம் காண வேண்டிய துறைகளை கண்டறிவதும் மிகவும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு துறையிலும் உள்ள நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகள் அவற்றின் ஒரு முக்கிய பணியாக, அத்துறை சார்ந்த இலக்குகளின் முன்னேற்றத்தையும், அவற்றிற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பான விவரங்களையும் ஆவணமாக வெளியிடும். மாநிலத்திற்கான நீடித்த வளர்ச்சி இலக்கு தொலைநோக்கு ஆவணம் திருத்தப் பணிகள், பணிக்குழுவின் உள்ளீடுகள் மற்றும் அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட மாநிலத் திட்டக் குழுவால் (முந்தைய மாநில கொள்கை வளர்ச்சிக் குழு)

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் வெளியிடப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்கு தரவு தாள் 2020, பல்வேறு இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகளில் மாநிலத்தின் முன்னேற்றத்தை காட்சியாக அளிக்கும் வகையில் உள்ளது.

### 2.1.9 திட்டங்களை இலக்குகளுடன் ஒருங்கிணைத்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, அனைத்து சார்நிலைத் துறைகளில் உள்ள மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த திட்டங்கள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. இது திட்டங்களின் தாக்கத்தை நீடித்த வளர்ச்சி இலக்கின் கண்ணோட்டத்தின் வழியே அறிந்திட வழிவகை செய்கிறது.

### 2.1.10 திறன் வளர்ப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் அறிமுக நிலையிலேயே, 2017–ஆம் ஆண்டில் அனைத்துப் பணிக் குழுக்களாலும் தத்தமது உறுப்பு அலுவலர்களுக்கு, திறன் வளர்த்தல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தால், மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இணையதள கண்காணிப்புப் பலகையில் தரவுகளை பதிவேற்றம் செய்வது தொடர்பாக, சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கும் மற்றும் அத்தரவுகளை சரிபார்த்து அதனை உறுதி செய்வது குறித்து, துறைகளின் முகமை அலுவலர்களுக்கும் செயல்முறை பயிற்சிகளை நடத்தியுள்ளது. மேலும், நீடித்த வளர்ச்சி

இலக்குகளை எட்டுவதற்கான உரிய திட்டங்களின் செயல்பாட்டினையும் அதன் முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தக்கூடிய வகையிலான ஆவணங்களை தயார் செய்வதற்கான பயிற்சிகளும் இவ்வலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சில இலக்குகள் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பையும் பல்வேறு நிறுவனங்களுடனான கூட்டாண்மையையும் அத்தியாவசியமாக கொண்டுள்ளன. இவற்றிற்காக பல்வேறு கருத்தரங்குகளும், விவாத கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

திறன் வளர்ப்பு ஒரு தொடர் நடவடிக்கை ஆகும். ஏனெனில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வு முழுமையாக புரிந்துக் கொள்ளப்பட்டு துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களோடு ஒன்றிணைத்தல் அவசியம் என்பதால், மாவட்ட, வட்டார, ஊரக மற்றும்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்ட இயலும்.

அனைத்து துறைகளும் தமக்கான தகவல் கல்வி தொடர்பு திட்டங்களில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த பயிற்சித் திட்டத்தினை ஒருங்கிணைக்குமாறு வலியுறுத்தப்படுகின்றன.

**2.1.11 2020–ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள்**

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030–ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டியவை என்றாலும், அவற்றுள் சில குறிக்கோள்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், அவற்றின் தீவிரத்தன்மை மற்றும் அவற்றின்மீது உடனடியாக கவனம் செலுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்து இவை 2020–ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டியவை என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது. சுற்றுச்சூழல் சீர்கேடு, தண்ணீர் பற்றாக்குறை,

பேரிடர்களால் ஏற்படும் இழப்புகளைத் தணித்தல், சாலை விபத்துக்களால் நேரிடும் இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையை குறைத்தல், தாவர விலங்கின வகைகளைத் தக்க வைப்பதற்கான நடவடிக்கைகள், பருவநிலை மாற்றத்திற்கான மாநில செயல் திட்டம், மாநிலத்தில் பருவநிலை மீள் வளர்ச்சியினை எட்டுவதற்கான ஒரு பொதுத்தளத்தை உருவாக்குதல் ஆகியவை அதனுள் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழக அரசு இவற்றிற்கு முன்னுரிமை அளித்து இதற்கான பணிகளை ஏற்கனவே துவக்கியுள்ளது. கொரோனா பெருந்தொற்று காரணமாக, இந்த இலக்குகளை எட்டுவதில் பின்னடைவு எற்பட்டுள்ளது என்பது உண்மையே. பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து இக்குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பேரிடர் மேலாண்மை குறித்த சென்டாய் வரையறையின்

வழிகாட்டுதல்படி, மாநில அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இது போன்று, சாலை விபத்துகளினால் நேரிடும் உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**2.1.12 மாநில குறிகாட்டிகள் வரையறை**

உலக அளவிலான குறிகாட்டிகளின் (232) அடிப்படையில், நாட்டின் முன்னேற்றத்தினை அளவிடும் வகையில் தேசிய அளவிலான குறிகாட்டிகள் (306) வரையறை செய்யப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு, மாநிலத்தின் முன்னுரிமைகளை உள்ளடக்கி, மாநிலத்திற்கான தனித்துவமான குறிகாட்டிகளையும் சேர்த்து மொத்தமாக 388 மாநில குறிகாட்டிகள் பணிக்குழுக்கள் மற்றும் பல்வேறு தொடர்புடைய துறைகளால் வரையறை

செய்யப்பட்டுள்ளன. தரவுகளை பெறுதல், பல்வேறு பணிகளுக்கான துறைகளை ஒருங்கிணைத்தல், நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஏற்படுத்தக்கூடிய நீண்ட கால விளைவுகளைக் குறித்த புரிதல் மற்றும் திட்டங்களின் விளைவுகளின் அடிப்படையில் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் உள்ள சில முக்கிய சவால்களாகும். மாவட்ட குறிகாட்டி வரையறையும் வட்டார குறிகாட்டி வரையறையும் தற்போது இறுதி செய்யப்பட்டுள்ளன. நகர்ப்புற குறிகாட்டி வரையறையும் மற்றும் மீள் குடியேற்ற குறிகாட்டி வரையறையும் இறுதி செய்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகம் ஏற்கனவே பல்வேறு துறைகளில் முன்னணியில் உள்ள சூழ்நிலையில், நீடித்த வளர்ச்சி இலக்கின் குறிகாட்டிகளின் வாயிலாக அவற்றின் செயல்பாடுகளை அளவிடுதல்,

வெற்றியடைந்த திட்டங்களை பகிர்தல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கினை தமிழகம் எய்துவதை உறுதி செய்திட தேவையான ஒருங்கிணைப்பினை கொண்டு வருதல் ஆகிய முயற்சிகளை இத்துறை மேற்கொள்கிறது.

**2.2 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 02.09.2014–ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண்.81–இல் ஆணைகள் வெளியிடப்பட்டு, ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிகப் பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்–வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக (Abdul Latif Jameel – Poverty Action Lab) (J–PAL–SA) அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து

கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (Massachusets Institute of Technology, USA) செயல்படும் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையிலும் வறுமையைக் குறைக்கின்ற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகின்ற உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இருக்கும் சில சிறந்த பொருளாதார மேம்பாட்டு வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஒரு கட்டமைப்பாகும்.

அரசுத்துறை அலுவலர்களின் திறனை மேம்படுத்தி, நடப்பு மற்றும் புதிய திட்டங்களின் மதிப்பீட்டாய்வுகளை திறமையாகச் செய்வதற்கு

அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு நான்கு முக்கிய நடவடிக்கைகளின் வாயிலாக தமிழக அரசிற்கு உதவி செய்து வருகிறது. (i) நடப்பு ஆய்வுகளிலிருந்து உள்ளூர் சவால்களுக்கான நுண்ணறிவை செயல்படுத்த கொள்கை ஆய்வு உரையாடல்களை ஈடுபடுத்துவது (ii) சாத்தியமான அளவீட்டிற்கு ஏற்றபடி புத்தாக்கங்களை சோதித்து வடிவமைப்பது (iii) ஆதாரங்களை உருவாக்கவும் நுகரவும் அரசுத் திறனை வலுப்படுத்துவது (iv) முடிவு எடுத்தலில் நிர்வாகத் தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்துவது.

இப்பணி பத்து அரசு துறைகள் மற்றும் ஜே–பாலை சேர்ந்த பதினைந்து ஆராயச்சியாளர்கள் உள்ளிட்ட 40 ஆராய்ச்சியாளர்களை உள்ளடக்கியது. தலைமைச் செயலாளரின்கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவால், 2014–ஆம் ஆண்டிலிருந்து நடந்த ஐந்து

வழிகாட்டும் குழுக் கூட்டங்களில், பதினாறு ஆய்வுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் எட்டு முன்னோடி மற்றும் வாய்ப்பு அறியும் ஆய்வுகளும், மூன்று முழு அளவிலான தாக்க விளைவுகளின் மதிப்பீட்டாய்வுகளும் ICDS மூலமாக தொற்று நோய்களின் தாக்கத்தை குறைப்பதற்கான தலைப்புகள் முதல் சிறார் நலன் பாதுகாப்பு மற்றும் கல்வியும் மேலும் முன் ஆரம்பப் பள்ளியில் கணித விளையாட்டு அடிப்படையிலான புத்தாக்க ஆய்வினையும் முடித்துள்ளது. குழு ஆய்வு உள்ளடக்கிய இரண்டு விளைவு மதிப்பீடுகளும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள முதியோரின் நலம் பேணுவதற்கான புத்தாக்க சோதனையும் மற்றும் இரண்டு வாய்ப்பு அறியும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கூட்டுக் கொள்கை உரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் சேர்த்து ஜே–பால்

உட்கட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் உள் மதிப்பீடுகளிலிருந்து ஆதாரங்களை பயன்படுத்தவும், உருவாக்கம், பகுப்பாய்வு செய்யவும் பதினைந்து பட்டறைகள் வாயிலாக பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. இப்பயிற்சி பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை மற்றும் சமூக நலன் பணியாளர்களுக்கும் மற்றும் இந்திய குடிமையியல் பயிற்சியாளர்களுக்கும் அளிக்கப்படுகிறது. கருத்துகளுக்கு மாற்றாக மேம்பட்ட தரவு இயக்க முடிவு எடுத்தல் வழிகளுக்ககான கருத்துக்களை பரிமாற்றம் செய்ய ஜே–பால் டி.ஏ.யு (J–PAL – DAU) உடன் இணைந்து தற்போது கொள்கை வெபினார் தொடர்களுக்கான தரவுகளை நடத்துகிறது.

முடிவுகளும் பரிந்துரைகளும் வழிகாட்டும் குழு மற்றும் ஆலோசனைக் குழுக்களுக்கு

சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் கண்டுபிடிப்பின் அடிப்படையிலான புத்தாக்கங்களும் மேம்பாடுகளும் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சமூகநலம் மற்றும் பெண்கள் மேம்பாடு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, பள்ளிக் கல்வி, வணிகவரி மற்றும் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் ஆகியதுறைகளுக்கு கொள்கை ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

**2.2.1 முக்கிய சாதனைகள்:**

தமிழ் நாட்டின் முறையான கொள்கை ஆராய்ச்சிக் கூட்டு, முக்கிய கொள்கைக் கேள்விகளைத் தெரிவிக்க, மதிப்பீடுகளின் பயன்பாட்டை ஒருங்கிணைக்க பல துறைகளுக்கு முறையான கட்டமைப்பை

வழங்கியுள்ளது. முடிவெடுப்பதைத் தெரிவிக்க, தரவு மற்றும் ஆதாரங்களுக்கான தீவிர கோரிக்கையுடன் அரசு இப்போது ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சுகாதார மற்றும் குடும்பநலத் துறைகள், சமூகநலம், மற்றும் பள்ளிக் கல்வித் துறைகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. மேலும், அடிப்படை சிக்கல்களை நன்கு புரிந்து கொள்வதற்கும் மேம்பாடுகளைச் செய்வதற்கும் ஆராய்ச்சி நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மைத் திட்ட (எம்.ஆர்.எம்.பி.எஸ்) ஆய்வு, தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான திட்ட செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக அதன் தரவுச் சேகரிப்பு மற்றும் மேலாண்மை முறையை வலுப்படுத்த சுகாதாரத் துறையின் பல மேம்பாடுகளுக்கு வழிவகுத்தது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை ஜே–பாலுடன்

இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளில் முதியோர் நிலை குறித்த முதற்கட்ட அடிப்படை குழு கணக்கெடுப்பு, மதிப்பீடுகளை கணக்கீடு செய்வதன் மூலம் முதியோரில் பெரும்பான்மையானோர் தனிமையில் வாழ்வதற்கான சவால்களை எதிர்கொள்ள மற்றும் தலையீடுகளை மதிப்பீடு செய்ய அரசு தூண்டியுள்ளது.

ஜே–பால் உடன் இணைந்த ஆராய்ச்சியாளர்கள் கடுமையான மதிப்பீட்டின் மூலம் தாக்கத்தை ஏற்படுத்தி ஒரு புதுமையான கணித விளையாட்டுத் திட்டத்தை இயக்குவதன் மூலம் சிறு வயதிலிருந்தே கணிதத் திறன்களை வலுப்படுத்த பள்ளிக் கல்வித்துறை முயன்று வருகிறது.

அரசுக் கொள்கை வகுப்பில் மதிப்பீடுகள் மற்றும் தரவின் பயன்பாட்டை வலுப்படுத்தவும், நிறுவனமயமாக்கவும் நிரல் மதிப்பீடுகளுக்கான

வழிகாட்டுதல்களை வெளியிடுவதன் மூலம், கொள்கை வகுப்பில் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் பயனுள்ள முடிவெடுப்தற்கு நிர்வாகத் தரவைப் பயன்படுத்துவதை ஆதரிக்க தரவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு செயல்முறை ஆராய்ச்சி துறையால் உருவாக்கப்பட்ட தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்த டிஜிட்டல் தரவு சேகரிப்பு தளங்களையும் (ம) ஒருங்கிணைந்த புதிய உத்தரவாதமான வழிமுறைகளையும் மேற்கொள்கிறது.

தமிழக அரசின் மிக முன்னுரிமையான கொள்கைத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை விரிவு படுத்துவதற்கு முன்பு, அவற்றின் மீது களஆய்வு மேற்கொண்டும்,

விவாதக் கூட்டங்கள் நடத்துவதன் மூலமும், இந்தியாவின் பிறபகுதிகளிலோ அல்லது உலகளவிலோ பரிசோதிக்கப்பட்ட புதுமையான கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றினை தமிழகத்தில் ஆய்வுக்குட்படுத்திட, தமிழக அரசும் தெற்காசியாவிற்கான அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் (J–PAL–SA) தொடர்புடைய முக்கிய துறைகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

**2.3 சிறப்பு முயற்சிகள்**

அரசு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 02.11.2006 ஆம் நாளிட்ட 146 ஆம் (நிலை) எண் அரசாணையில், "பொது அதிகார பொருண்மைகளின்" கீழ் வரும் அலுவல் விதிகளின் முதலாவது அட்டவணையில் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மையை சேர்ப்பதற்கு ஆணைகள் பிறப்பித்தது. வெவ்வேறு துறைகளிடமிருந்து வரப்பெற்ற புத்தாக்கத்

திட்டங்களை செயல்முறைபடுத்துவதும் அரசின் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிப்பதும் சிறப்பு முயற்சிகள் பிரிவின் பொருண்மையாகும். நோக்கத்தினை சிறப்பு முயற்சியாக செயல்படுத்துவதற்கான விரிவான நடைமுறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் ஒருங்கிணைக்கப்படலாம். அதன் அடிப்படையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18.01.2007 ஆம் நாளிட்ட 10 ஆம் (நிலை) எண் அரசாணையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், இத்துறையின் கீழ், 'சிறப்பு முயற்சியாக' செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**2.4 இருபது அம்சத் திட்டம்–2006**

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986

மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது "இருபது அம்சத் திட்டம்–2006" எனப்பெயரிடப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலைவாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டுவசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச்சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத்திட்டம்–2006–இன் கீழ் குறித்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் செயல்பாடுகள் குறித்த காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், திட்டங்களை செயல்படுத்தும்

துறைகள் / நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்டச்செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது,

**3.0 துறைத்தலைவர்கள்**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள்/ நிறுவனங்கள் பின்வருமாறு:

(i) மாநில திட்டக் குழு (முந்தைய மாநில கொள்கை வளர்ச்சிக்குழு)

(ii) பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

(iv) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL), ஒரு கூட்டுத்துறை நிறுவனம்.

### 3.1 மாநில திட்டக் குழு

மாநிலத்தின் வளர்ச்சி குறித்த செயல்பாடுகளின் மீது ஆலோசனைகளை அரசுக்கு பரிந்துரை வழங்க தமிழ்நாட்டில், முதன்முதலில் 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் மு.கருணாநிதி, அவர்களால் மாநில திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு ஆலோசனை அமைப்பாக செயல்பட்டு வருகிறது. மாநில திட்டக்குழு, துணைத்தலைவர் அவர்களின் கீழ் வளர்ச்சி சார்ந்த முக்கிய துறைகளின் நிபுணர்களை உறுப்பினர்களாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாநில திட்டக்குழுவானது, மாநில கொள்கை வளர்ச்சிக் குழுவாக அரசாணை நிலைஎண்.23, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 23.04.2020–ல்

மாற்றம் செய்யப்பட்டு, அதன் இன்றியமையாத பணிகளான இலக்கு நிர்ணயித்தல், கண்காணித்தல், மதிப்பீடுதல் மற்றும் கொள்கைக்கான ஆலோசனை வழங்குதல், கொள்கை ஒத்திசைவு உருவாக்குதல், சிறப்பு திட்டங்களைச் செயல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு மாநில வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அண்மையில் அரசாணை (நிலை) எண்.133, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 07.06.2021–ல், துணைத் தலைவர், முழுநேர உறுப்பினர் மற்றும் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற 8 பகுதிநேர உறுப்பினர்கள் உள்ளிட்ட 10 நபர்களுடன் குழுவானது மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை மற்றும் நிதித்துறை ஆகியோர் அலுவல்சார்

உறுப்பினர்கள் ஆவார்கள். மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் இதில் நிர்வாக பொறுப்பு வகிப்பார்.

தற்பொழுது, அரசாணை நிலை எண்.160, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள்.25.08.2021ல் மாநில கொள்கை வளர்ச்சி குழுவானது மாநில திட்டக் குழு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 3.1.1 மாநில திட்டக் குழுவின் முதன்மையான பணிகள்

(i) பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு, வறுமை போன்ற பேரியல் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளைக் கண்காணித்தல் மற்றும் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களைத் திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்.

(ii) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கண்காணித்து அதன் வளர்ச்சிக்கான அறிக்கைகளை அரசுக்கு தேவைப்படும் பொழுது அனுப்புதல்.

(iii) தமிழ்நாடு தொலைநோக்கு 2023 மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள்–2030ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கும், ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிகாட்ட நீண்டகால, நடுத்தர மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுப்பதில் மாநில அரசுக்கு உதவுதல்.

(iv) தமிழ்நாடு தொலைநோக்கு 2023 மற்றும் ஐக்கியநாட்டு பொதுசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2020, 2025 மற்றும் 2030ல் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் நிதிக்குழுவின் காலஅளவு ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல்

துறை சார்ந்த செயல்பாட்டு திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்.

(v) கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கும் அவற்றை செயல் படுத்துவதை துரிதப்படுத்துவதற்கும், கொள்கை ஒத்திசைவு சிக்கல்களை முறையாக நிவர்த்தி செய்து, துறை மற்றும் துறை சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒருதளத்தை வழங்கும்.

(vi) அரசு சார்ந்த வல்லுநர்கள் மற்றும் தேசிய, பன்னாட்டு வல்லுநர்கள், கல்வி மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டமைப்பை ஊக்குவித்தல்.

(vii) மாநிலத்திற்கு தேவையான குறியீடுகள் (எ.கா.) மனித வள மேம்பாடு குறியீடு, பாலின குறியீடு மற்றும் இதர குறியீடுகள் பன்னாட்டு மற்றும் தேசிய தரத்தில்

வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை அணுகுதல் மற்றும் உகந்த திட்டங்களுடன் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

(viii) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் செயல்பட்டு வரும் பல முன்னோடியான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து ஆய்வின் வாயிலாக அத்துறைகளில் செயல்படுத்தப்பட வேண்டிய நுட்பமான விளக்கங்களை அரசுக்கு வழங்குதல்.

(ix) தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் கூட்டு சமூகத்தின் மூலம் அறிவு, புதுமை மற்றும் தொழில்

முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்க உதவுதல்.

(x) துறைகளுக்கிடையேயான வேறுபாடுகள் மற்றும் ஒதுக்கீடுகள், ஒழுங்குமுறை ஆகியவற்றின் இலக்குகளை அடைவதற்கான கட்டாய கட்டமைப்பு உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவு ஆலோசனைகளை வழங்குதல்.

(xi) நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

அ. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

ஆ. மாநில புதுமை முயற்சிகள் திட்டம்

இ. மலை / வனப்பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம்

ஈ. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் செயல்பாடுகள்

(xii) இதேபோல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் ஒருவரும் விடுபடாமல் இருத்தல் என்ற கருத்தின் அடிப்படையில் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

(xiii) இந்திய அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் 73 மற்றும் 74–ன் படி விரிவாக்கப்பட்ட அத்தியாவசியமான திட்டங்கள், வழிமுறைகள் மற்றும் விளைவுகள் குறித்து கருத்துரு அனுப்புதல்.

### 3.1.2 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

பல்வேறு பகுதிகளுக்கிடையே காணப்படும் சமூக பொருளாதார வளர்ச்சியை அளவிடக்கூடிய காரணிகளில் உள்ள ஏற்றத் தாழ்வினை குறைத்து மனிதவள மேம்பாட்டு குறியீட்டினை உயர்த்துவதே மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 2012–13–ம் ஆண்டு துவங்கப்பட்டது.

இத்திட்டமானது, தனிநபர் வருமானம், வேலைவாய்ப்பு, வறுமை, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின சமத்துவம் ஆகிய காரணிகளை உள்ளடக்கிய பின் தங்கிய வட்டாரங்களை மேம்படுத்துவதற்கென செயல்படுத்தப்படுகிறது.

ஒரு விரிவான ஆய்வு முறையின் வாயிலாக மாநிலத்தில் 105 பின்தங்கிய வட்டாரங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டம் அவ்வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், குடிசை வாழ்மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பின்தங்கிய நகர்ப்புறங்களில் உள்ள வார்டுகளில் நான்கில் ஒரு பங்கு வார்டுகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான அதிகாரக்குழுவின் வழிகாட்டுதலின்படி முன்னோக்கு திட்டம்

தயாரிக்கப்பட்டு, அதன்படி, திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகின்றது. மாவட்ட அளவில், தொடர்புடைய துறைவாரி அலுவலர்களை ஈடுபடுத்தி மாவட்ட ஆட்சியரால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**3.1.2.1 திட்டங்களுக்கான ஒப்புதல்**

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் அமைக்கப்பட்ட மாநில அளவில் அதிகாரம் பெற்ற குழுவால், கடந்த 2020–21ஆம் ஆண்டு வரை **ரூ.596.64** கோடி மதிப்பிலான **747** திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பின்வரும் காரணிகளை மேம்படுத்துகின்றன.

- வருமானம் ரூ.102.65 கோடி மதிப்பீட்டில் 147 திட்டங்கள்
- வறுமை ரூ.74.30 கோடி மதிப்பீட்டில் 107 திட்டங்கள்
- வேலைவாய்ப்பு ரூ.57.93 கோடி மதிப்பீட்டில் 118 திட்டங்கள்

- கல்வி — ரூ.82.81 கோடி மதிப்பீட்டில் 91 திட்டங்கள்
- சுகாதாரம் — ரூ.227.97 கோடி மதிப்பீட்டில் 218 திட்டங்கள்
- பாலின சமத்துவம் — ரூ.50.98 கோடி மதிப்பீட்டில் 66 திட்டங்கள்

### 3.1.2.2 மலை / வனப்பகுதிகளுக்கான சிறப்பு கவன திட்டம்

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் உதவியுடன் மலை / வனப்பகுதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டம் ஒன்று 2017–18 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மலை / வனப்பகுதிகளின் வளர்ச்சிக்காக 2019–2020 ஆண்டு வரை 55 திட்டங்கள் ரூ.98.03 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் வாயிலாக மலை / வனப்பகுதிகளில் பழங்குடியினர் வாழ்விடங்களில் தேவையான சாலை இணைப்பு வசதி, அடிப்படை வசதிகள், பள்ளிகளுக்கான

உட்கட்டமைப்பு வசதிகள், மதிப்பு கூட்டப்பட்ட மரம் தவிர்த்த பிற வன விளைபொருட்கள், வேளாண் பொருட்கள், மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள், பழங்குடியினர் பள்ளிகளில் இணை கல்விசார் செயல்பாடுகள், மாணவியருக்கான விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

### 3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே புத்தாக்கத்தின் இருப்பிடமாக உருவாக்குவதற்கும் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் அரசாணை நிலை எண்.93, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 26.09.2014–ல் ஆணையிடப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டம், புதுமைகளை வளர்ப்பதற்கான செயல்முறை மற்றும் இடர்பாடுகளைக் களைவதற்காக பல்வேறு

புத்தாக்கத் திட்டங்கள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்த நிதி உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தினை செயல்படுத்த, அரசு ஏற்கெனவே நடைமுறையிலிருந்த பகுதி–II திட்டத்தினை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்காக, 2015–16 ஆம் ஆண்டு தொடக்க நிதியாக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்தும், பிறகு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி, திட்டத்தினை செயல்படுத்த விரிவான வழிமுறைகள் அரசாணை நிலைஎண்.124, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள். 24.10.2014–ல்

புத்தாக்கத் திட்டங்களை தெரிவு செய்து பரிந்துரை செய்ய வழங்கப்பட்டுள்ளது.

2015–16ஆம் ஆண்டு முதல் 2019–20 வரை 320 திட்டங்கள் சுமார் ரூ.632.88 கோடி மதிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்திற்கு 2020–21ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடி வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2020–21 நிதியாண்டு முதல் சுற்றில் ரூ.64.02 கோடி அளவில் 10 திட்டங்கள் மூன்றாண்டு காலத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 30 துறைகள் இத்திட்டத்தின்கீழ் தங்கள் துறைகளுக்கான முன்னோடி திட்டங்களை செயல்படுத்துவதற்கும், மாற்றுத் தொழில்நுட்பம் மூலம் உற்பத்தி பெருக்கம், கண்டறியப்பட்ட பிரச்சனைகளுக்கு ஆராய்ச்சி ஆய்வுகள் மூலம் தீர்வுகளை

கண்டறிதல் போன்றவற்றிற்கு இந்நிதியை பயன்படுத்தியுள்ளது.

2020–21இல் துறைவாரியாக பரிந்துரை செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் திட்டங்களின் விவரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **துறைகள்** | **ஒதுக்கீடு தொகை (கோடியில்)** |
|---|---|---|
| 1 | வேளாண் மற்றும் அதனை சார்ந்த துறைகள் | 6.45 |
| 2 | தொழில் மற்றும் உட்கட்டமைப்பு துறைகள் | 39.30 |
| 3 | கல்வி மற்றும் இளைஞர் நலன் துறைகள் | 18.27 |
| | **மொத்தம்** | **64.02** |

3.1.3.1 **வேளாண் மற்றும் அதனை சார்ந்த துறைகள்**

தமிழகத்தைச் சார்ந்த மீனவ இளைஞர்களுக்கு கடற்கரையோர உயிர்ப்பாதுகாப்பு மற்றும் நீர் மூழ்கும் பயிற்சி அளிக்கும் வகையில் உயிர் பாதுகாவலர் மற்றும்

நீர் மூழ்குபவர் பயிற்சித் திட்டம், பண்ணைக் குட்டைகளில் பாலித்தின் உறைகளை பயன்படுத்தி குறுகியகால நீர்நிலைகளில் வேகமாக வளரக்கூடிய மீன்வளர்ப்பினை மேற்கொள்ளும் திட்டத்தின் வாயிலாக சமுதாயத்தில் வாழ்வாதாரம் மற்றும் ஏழ்மை நிலையினை நீக்குதல், வனஉயிரின தாவரஉண்ணிகளில் காணப்படும் பாக்டீரிய நோய்தொற்றுகளை விரைவாகவும் துல்லியமாகவும் குறைந்த செலவில் கண்டறிவதற்கான தொழிற்நுட்பத்தை உருவாக்கும் திட்டம், இந்தியாவில் முதன்முதலில் தமிழ்நாட்டு வனப்பகுதிகளில் மான்கள் மற்றும் யானைகளை பாதிக்கும் "ஜான்ஸ்" நோய் (MAP) தொற்றுகளை கண்டறியும் கருவியை உருவாக்கும் திட்டம் வாயிலாக வனஉயிர்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்தல், கடத்தப்படும் வனவிலங்குகளின் உடல் பாகங்கள்

மற்றும் அவற்றை வடிவம் மாற்றி கடத்தும்போது அதனை ஆராய்ந்து அவை என்ன வகை உயிரினம் என்பதை துல்லியமாக கண்டறிவதற்கான டி.என்.ஏ. தொழில் நுட்பத்தை உருவாக்கும் திட்டம், பாலாறு மற்றும் திண்டுக்கல் மாவட்டம், புரந்தலை ஆறுகளில் கலக்கப்படும் தொழிற்சாலை கழிவுகளை நீக்கும் திலேப்பியா வகை மீன் இனத்தை செயற்கையாக உற்பத்தி செய்து சுகாதாரம், சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் திட்டம்.

3.1.3.2 **தொழில்கள் மற்றும் உள்கட்டமைப்பு துறை**

சிப்காட் தொழில் புதுமை கண்டுபிடிப்பு மையம் திருப்பெரும்புதூர் மற்றும் ஒசூர் தொழில் பூங்கா வாயிலாக சுற்றுப்புற மேன்மை மற்றும் உள்ளூர் மக்களின் தொழில் உற்பத்தி பெருக்குதல், இ–ஆசிரியர் திட்டம் மூலம் தமிழ் கற்பித்தலை நவீன தொழில்நுட்பத்தின் வழி

வழங்குதல், நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டுத் திட்டம் வழி அரசு செயல்பாடுகளில் ஏற்படும் குறைகளை நீக்குதல்.

3.1.3.3 **கல்வி மற்றும் இளைஞர் நலத்துறை**

மாற்றுத் திறனாளிகள் சமூகத்தினருக்கான பயன்பாட்டிற்கு பகுதி மற்றும் முழுமையாக தானியங்கக்கூடிய நுண்ணறிவுள்ள புற உடற்கூடு மற்றும் செயற்கை கை உருவாக்கும் திட்டம். தமிழ்நாட்டிலுள்ள மந்தக் கழிவுகளை உயிர் உரங்களாக மாற்றுவதற்கான தொழில்நுட்ப திட்டத்தின் மூலம் திடகழிவுகள் மேலாண்மையை மேம்படுத்துதல்.

**3.1.4 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில் 2015–16 ஆம் ஆண்டிலிருந்து சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் துவங்குவதற்கு முன்னர் 1975–76 ஆண்டு முதலாக ஒன்றிய அரசின் 90 சதவிகித நிதி

உதவியுடனும், 10 சதவிகித நிதிக்கடன் அடிப்படையில் பெற்று பின்னர் மாநில பங்களிப்புடனும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயற்பட்டு வந்தது.

2015–16 ஒன்றிய அரசின் வரவுசெலவு திட்டத்தில், ஒன்றிய அரசு 2015–16 ஆம் ஆண்டு முதல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஒன்றிய அரசின் நிதியுதவி நிறுத்தப்படும் என்று அறிவித்தது. மேலும், மேற்படி திட்டங்களை மாநில அரசு, தன் சொந்த மாநில நிதியிலிருந்து தொடரலாம் எனவும் அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு2015–16 ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ.75.00 கோடி நிதி உதவியுடன் தமிழகத்தில் அமைந்துள்ள மலைப் பகுதிகளில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சிறப்புப்பகுதி

மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்தது.

தற்பொழுது, சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் பதினோறு மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டமானது நிர்வாகம் மற்றும் கள ஆய்வு பணிகளுக்காக இரண்டு அலகுகளாக செயல்படுத்தப்பட்டு அலகு–1 ஆனது திட்ட இயக்குநர், மலைப்பகுதி மேம்பாட்டு வளர்ச்சி திட்டம் (அதாவது சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்) அவர்களைத் தலைமையாகக் கொண்டு 1. நீலகிரி 2. கோயம்புத்துர் 3. திருப்பூர் மற்றும் 4. ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அலகு–2 ஆனது குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில திட்டக் குழு தலைமையில் 1. திண்டுக்கல் 2. மதுரை 3. தேனி 4. விருதுநகர் 5. திருநெல்வேலி 6. தென்காசி மற்றும் 7. கன்னியாகுமரி ஆகிய 7

மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த நிர்ணயிக்கப்பட்ட பகுதியானது கடல் மட்டத்தில் இருந்து 600 மீட்டருக்கு மேலான மலைப் பகுதிகளில் திட்டம் உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும்.

இத்திட்டத்தில் வனம், குடியிருப்புப் பகுதிக்கு அருகில் அமையப்பெறாத மண்வளம் மற்றும் நீர் வளத்திற்கு சவாலாகப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கும் இடைப்பட்ட பகுதியின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது, நீர் மற்றும் நில வளர்ச்சிக்கும் மனித வாழ்வாதாரத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துதலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நீர்வாழ்

உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் நுண்நீர் பிடிப்புப் பகுதி அளவில் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

மண்வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண்மை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்பின் கட்டமைப்பில் இடைவெளி நிரப்பும் விதமாக பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர்வள மேம்பாடு மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பணிகள் தொடர்புடைய துறைகளின் மூலம் மேற்கொள்ளும் வகையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அளவில் உருவாக்கப்பட்ட உயர்நிலைக்குழுவினால் இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை பின்பற்றியும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான நோக்கத்துடனும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.75.00 கோடி நிதி ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு இதுவரை மார்ச், 2021 முடிய **2345** திட்டங்களுக்கு ரூ.**362.66** கோடி அளவிற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2021-22ஆம் ஆண்டிற்காக வரவு செலவு திட்டத்தில் ரூ.75.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை விரைவாக கண்காணிக்கும் பொருட்டு இணைய தளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

### 3.1.5 தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

அரசாணை (நிலை)எண்.58, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்(மாதிகு)துறை, நாள் 10.02.2011–ன்படி, தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் என்ற ஒரு நிலையான வாரியம், மாநில திட்டக்குழு துணைத் தலைவரை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.40, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு–1) துறை, நாள் 04.03.2015–ன்படி, தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள மலைப் பகுதிகளுக்கான மாவட்ட அளவிலான தொழில் நுட்ப பிரிவு செயல்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்ப பிரிவின் செயல்பாடானது, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும்

கன்னியாகுமரி போன்ற மேற்கு தொடர்ச்சி மலை சார்ந்த மாவட்டங்களில் கள அமலாக்கத்தை மேற்பார்வை செய்வதாகும்.

இவ்வாரியத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- நில வளத்தை மதிப்பீடு செய்தல், நிலக்கொள்கையை வகுப்பதில் அரசுக்கு அறிவுரைகள் வழங்குதல், மாறிவரும் நிலப்பயன்பாட்டிற்கு ஏற்ப ஒரு அறிக்கை மற்றும் சாத்தியமான முன்னுரிமைகள் போன்றவற்றை தயாரித்தல்.
- மாறிவரும் சுற்றுச்சூழலின் காரணிகளான மாசு, புவி வெப்பமயமாதல் ஆகியவை குறித்து உறுதியான, அறிவியல் சார்ந்த கொள்கை குறுக்கீடுகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- ஒரு நிலையான தரவு தளத்தை உருவாக்குவதன் மூலம் நிலம் மற்றும் நீர்

வளங்களை பாதுகாக்கவும், நிர்வகிக்கவும், திட்டமிடல் மற்றும் விழிப்புணர்வு திட்டத்திற்கு ஒரு பயனுள்ள பங்கை வகிக்கும்.

2011–2012 முதல் 2020–2021 வரை மொத்தம் 67 ஆராய்வுகளுக்கு ரூ.673.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன. அவற்றில் 44 ஆராய்வுகள் நிறைவடைந்துள்ளன. மீதம் இருபத்து மூன்று (23) ஆராய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதேபோன்று 11 பயிலரங்கங்கள் மற்றும் ஒரு கருத்தரங்கிற்கு மேற்படி காலத்தில் ரூ.55.97 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாராய்வுகள் நிலப்பயன்பாடு, நீர், விவசாயம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல், ஈரநிலம், காலநிலை மாற்றம், நகரமயமாக்கல், வனம், கழிவு மேலாண்மை மற்றும் ஆரோக்கியம் போன்ற பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1.6 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதில், மாநில திட்டக் குழுவும், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையும் இணைந்து, தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புடன் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

#### 3.1.6.1 உயர் அதிகாரக்குழு மற்றும் பணிக்குழுக்கள்

மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுவதற்காக ஒன்பது முகமை துறைகளின் அரசு செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, மாநில அளவிலான உயர் அதிகாரக்குழு, அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 17 இலக்குகள் மற்றும் அதன் 169 குறிக்கோள்கள் எய்தப்படுவதை அவ்வப்போது, ஆய்வு செய்து கண்காணிப்பதற்காக, 17 இலக்குகளை உள்ளடக்கிய, எட்டு (8) பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த எட்டு பணிக்குழுவிலும், இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எட்டுவதற்கு தொடர்புடைய துறைகள் இதில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். நிர்ணயிக்கப்பட்ட பணிவரையறைகளின்படி பணிகள் மேற்கொண்டு வருகின்றன. மாநில திட்டக் குழுவின் குழுமத் தலைவர்கள் உறுப்பினர் அமைப்பாளர்களாக உள்ளனர்.

### 3.1.6.2 நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொலைநோக்கு ஆவணம் 2030

ஒவ்வொரு இலக்கிற்கும் தொலைநோக்கு ஆவணம் தயார் செய்ய வேண்டியது பணிக்குழுக்களுக்கான பணிவரையறையில்

முக்கியமான ஒரு பொறுப்பாகும். இந்த தொலைநோக்கு ஆவணம் தயார் செய்வதில், இதர பொறுப்புகளான, அளவிடக்கூடிய குறிகாட்டிகளை கண்டறிதல், அவற்றிற்கான தரவுகளை, அடிப்படைதரவாக 2015–16 ஆம் ஆண்டிற்கும் மற்றும் 2016–17 முதல் 2018–19 ஆண்டுகளுக்கான தரவுகளையும் துறைகளிலிருந்து பெறுவது, இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு தொடர்புடைய திட்டங்களை ஒருங்கிணைப்பது ஆகியவை உள்ளடங்கியுள்ளது.

மேலும், இந்த ஆவணத்தைத் தயார் செய்வது தொடர்பான வழிகாட்டுதலுக்காக, பணிக்குழுக்களின் தலைவர்களான முகமை துறையின் அரசு செயலாளர்கள் தலைமையில் 5 முதல் 7 வரையிலான பணிக்குழுக் கூட்டங்களும் உறுப்பினர் அமைப்பாளர்களால் நடத்தப்பட்டு, அதில் ஒவ்வொரு இலக்கிற்கும் தனித்தனியே

தொலை நோக்கு ஆவணம் வரைவு செய்யப்பட்டது. மாநிலத்திற்கான விரிவான நீடித்த வளர்ச்சி தொலைநோக்கு ஆவணம் 2030 தயார் செய்திடும்பணி பணிக்குழுக்களின் உள்ளீடுகள் மற்றும் அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட மாநில திட்டக் குழு (முந்தைய மாநில வளர்ச்சி கொள்கை குழு)வினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

### 3.1.6.3 மாநில / மாவட்ட / வட்டார குறிகாட்டி வரையறை

புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள வழி காட்டுதல்களின்படி, தேசிய குறிகாட்டி வரையறையை அடிப்படையாகக் கொண்டு, தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் பங்கேற்புடன் தொடர் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, மாநிலத்திற்கான மாநில குறிகாட்டி

வரையறை 314 குறிகாட்டிகளுடனும், மாவட்ட அளவில் தரவுகளை கொண்டுள்ள 104 குறிகாட்டிகளுடனும், வட்டார அளவில் தரவுகளை கொண்டுள்ள 93 குறிகாட்டிகளுடனும் மற்றும் மாநில திட்டக் குழுவின் உள்ளீடுகளுடன் இறுதி செய்யப்பட்டு பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

**3.1.6.4 பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் களைவது தொடர்பான தொடர் கருத்தரங்கு**

பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் களைவது தொடர்பாக 6 நாட்கள் தொடர் கருத்தரங்கு, ஐக்கிய நாடுகள் மகளிர் அமைப்பு மற்றும் யுனிசெப் அமைப்புடன் இணைந்து திட்டம் மற்றும் வளர்ச்சி துறையால், டிசம்பர் 2020–ல் நடத்தப்பட்டது. தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் பங்கேற்ற, இக்கருத்தரங்கை நடத்துவதற்கான பணிகளை,

பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறையுடன் இணைந்து மாநில திட்டக் குழு(முந்தைய மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு) மேற்கொண்டது.

**3.1.7 முன்னேற விழையும் மாவட்டங்கள்**

'முன்னேற விழையும் மாவட்டங்கள்' என்ற திட்டமானது2017–ஆம் ஆண்டு ஒன்றிய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு நித்தி ஆயோக்கினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு வறுமை, நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, அடிப்படை வசதிகள், திறன்மேம்பாடு மற்றும் அனைவருக்குமான நிதி சேவைகள் ஆகிய 11 முக்கிய காரணிகளில் பின் தங்கிய 115 மாவட்டங்களை முன்னேற விழையும் மாவட்டங்களாக இனங்கண்டுள்ளது.

ஒன்றிய அரசின் உள்துறையால் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவை என தெரிவு செய்யப்பட்ட 35 மாவட்டங்களும் இந்த 115 முன்னேற விழையும் மாவட்டங்களுள் அடங்கும்.

இதன் நோக்கம் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு நிர்வாக கூட்டமைப்பு, மாநில மற்றும் ஒன்றிய அரசின் திட்டங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் மாவட்டங்களிடையே வளர்ச்சிக்கான போட்டியினை தோற்றுவித்தல் என்ற உத்தியின் வாயிலாக முன்னேற விழையும் மாவட்டங்களை மேம்படுத்துவதாகும்.

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 115 மாவட்டங்களில் தமிழகத்தில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரு மாவட்டங்கள் முன்னேற விழையும் மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

**3.1.7.1 நிர்வாகம்**

இத்திட்டம் நேரடியாக நித்தி ஆயோக்–ஆல் நிர்வகிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியரால் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தை ஒன்றிய அரசு அமைச்சகங்களில் உள்ள இணைச் செயலர் அதற்கு மேலுள்ள

நிலையிலான அலுவலர்கள் ஒன்றிய அரசின் பற்று அலுவலர்களாகவும், மாநில அரசின் செயலர் நிலையில் உள்ள அலுவலர் மாநில பற்று அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டு மாவட்டங்களில் கள ஆய்வு செய்து முன்னேற்றத்திற்கு தேவையான வழிகாட்டுதல்களை அளிக்கின்றனர். ஒவ்வொரு முன்னேற விழையும் மாவட்டத்திற்கும் ஒன்றிய அரசின் ஒரு அமைச்சகம் வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும், வழி நடத்தவும் நியமிக்கப்பட்டுள்ளது. இவற்றோடு ஒன்றிய அரசின் அமைச்சர் ஒருவரும் சில மாவட்டங்களை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தில் முக்கிய பகுதிகளான நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை மற்றும் நீராதாரங்கள், அனைவருக்குமான நிதி சேவைகள் மற்றும்

திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை கட்டமைப்பு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்படுகிறது. மாவட்டங்களின் மாதாந்திர முன்னேற்றங்களுக்கான நிகழ்நேர விவரங்களை நேரடியாக பெற்றிடும் வகையிலான இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களின் முன்னேற்றத்தை அளவிட 49 முக்கிய செயல்பாட்டு காரணிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் சிறப்பாக செயல்பட்டுள்ள மாவட்டத்தின் அடைவுகளை இலக்காக கொண்டு, இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்கள் தமக்கென திட்டங்களை வகுத்து அவற்றை விரைந்து நிறைவேற்றுதலில் மாவட்டங்களிடையே போட்டி ஏற்படுத்தும் முகமாக கடந்த மாதத்திற்கும் நிகழ்கின்ற மாதத்திற்கும் இடையேயான முன்னேற்றம் ஒவ்வொரு மாதமும் நித்தி ஆயோக்–ஆல் கண்காணிக்கப்பட்டு, மாதந்தோறும்

தரவரிசைப்படுத்தப்படும். மற்றும் ஒட்டுமொத்த மதிப்பெண் மற்றும் துறைவாரியான மதிப்பெண் அடிப்படையில் தரவரிசை பட்டியல் வெளியிடப்படும்.

**3.1.7.2 நிதி உதவி**

ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் தங்களின் கூட்டு சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து (CSR) இம்மாவட்டங்களுக்கு நிதி உதவி அளிக்க ஒன்றிய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அயல்நாட்டு நிதி உதவிபெறும் திட்டத்தின் (EAP) கீழ் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மூலம் கீழ்கண்ட மூன்று சாளரங்கள் வாயிலாக உதவி அளிக்கப்படுவதாக நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

| வ. எண் | விவரம் | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் | 600 |

| | | |
|---|---|---|
| | மாவட்டங்களில் திட்டங்களை போட்டி முறையில் செயல்படுத்துவதில் மாவட்டங்களுக்கு 20 மாதத்திற்குமாதம் 30 கோடிவீதம் (சாளரம் – 1 ) | |
| 2 | ஒன்றிய அரசின் செயல்கள் அடங்கிய அதிகாரம் படைத்த குழுவால் அனுமதிக்கப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்கான சிறப்பு திட்டங்களுக்கான நிதி (சாளரம் – 2) | 350 |
| 3 | இந்தியாவில், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க நித்தி ஆயோக்கில் நிர்வாக வசதி, தேர்ந்தடுக்கப்பட்ட தரவுகளை மூன்றாம் அமைப்பின் களஆய்வு வழியாக உறுதி செய்தல், நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாநிலம் தரவரிசை எட்டும் பொருட்டு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிடையே போட்டியினை ஏற்படுத்துதல், மாநிலம், மாவட்டம், துணை மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளித்தல் (சாளரம் – 3) | 24 |
| | **மொத்தம்** | **974** |

ஒட்டுமொத்த தரவரிசையில் முதலிடம் பெறும் மாவட்டத்திற்கு, ரூ.10.00 கோடியும், வளர்ச்சி பிரிவுகளில் முதலிடம் பெறும் மாவட்டங்களுக்கு ரூ.3.00 கோடியும், திட்டம் சாரா நிதியாக வழங்கப்படுகின்றது.

### 3.1.7.3 மாவட்டங்களின் செயல்பாடு

ஏப்ரல் 2018–இல் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்கள் 5 துறைகளில் முன்னேற்ற நிலைக்கான ஒட்டு மொத்த மதிப்பெண் முறையே 45.6 மற்றும் 46.8 ஆகும்.

விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களும் அளவுருக்களின் மீது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து பிப்ரவரி 2021–இல் ஒட்டுமொத்த குறியீட்டு மதிப்பெண்கள் முறையே 62.9 மற்றும் 59.7 பெற்றுள்ளன.

விருதுநகர் மாவட்டம் பிப்ரவரி–மார்ச் 2019–இல் அடிப்படை கட்டமைப்பில் இந்திய அளவில் தர வரிசையில் முதன்மை மாவட்டமாக பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூ.3.00 கோடியும், ஜீன்–ஜீலை 2020–இல் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பிரிவில் எய்திய முன்னேற்றத்திற்காக ரூ.3.00 கோடியும் பெற்றுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் ஏப்ரல்–மே 2019–இல் வேளாண்மை மற்றும் நீராதாரங்கள் பிரிவில் எய்திய முன்னேற்றத்திற்காக இந்திய அளவில் தரவரிசையில் முதன்மை மாவட்டமாக பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூ.3.00 கோடி பெற்றுள்ளது.

## 3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை தமிழகத்திற்கான புள்ளி விவரங்களான வேளாண்மை புள்ளி விவரங்கள், தொழில் துறை

புள்ளி விவரங்கள், வீட்டு வசதி மற்றும் கட்டிடப் புள்ளி விவரங்கள், சந்தை மற்றும் விலைப் புள்ளி விவரம், மாநில வருவாய் மதிப்பீடு மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகள் உட்பட பல்வேறு புள்ளி விவரங்களை திட்டங்கள் வாயிலாக சேகரித்து, தொகுத்து, பகுப்பாய்வு செய்து அரசுக்கு வழங்குவதில் மாநில முகமை மையமாக செயல்படுகிறது. தமிழக அரசும் இந்திய அரசும் கொள்கை முடிவெடுக்கவும், நலத்திட்டங்களை செயல்படுத்தவும், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை சமூக பொருளாதாரக் காரணிகளை உரிய நேரத்தில் தேவையான, நம்பகமான முறையில் அளித்து வருகிறது.

### 3.2.1 துறையின் செயல்பாடுகள்

பல்வேறு பொருளாதார அளவீடுகளான மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலை குறியீட்டெண்

போன்ற மதிப்பீடுகள் இத்துறையின் மூலம் கணிக்கப்பட்டு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவதோடு மத்திய மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள், ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொண்டு பல்வேறு அறிக்கைகள் தயாரித்து அரசின் தேவைக்கேற்ப வழங்குவது இத்துறையின் முக்கிய செயல்பாடாகும். மேலும், இத்துறையால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, பருவம் மற்றும் பயிர் பற்றிய அறிக்கை, பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கை போன்றவை பல்வேறு துறைகளுக்கும் உடனடி பார்வைக் கையேடுகளாக பயன்படுகின்றன. இவை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் பயனுள்ளவைகளாகவும் அமைந்துள்ளன. தமிழகத்தின் பல்வேறு துறை சம்பந்தப்பட்ட திட்ட செயல்பாடுகளை

இத்துறையின் தொழில்நுட்பப் பணியாளர்கள் மதிப்பீடு செய்து பல்வேறு ஆய்வறிக்கைகள் மூலம் அரசின் நலத்திட்டங்கள் / சமூக பொருளாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்பட பணியாற்றி வருகின்றனர்.

பன்னாட்டு அளவில் பல்வேறு நாடுகள் மக்களுக்கு சிறந்த சேவை வழங்குவதற்காக ஆதார ரீதியிலான கொள்கை முடிவுகளின் அடிப்படையில் சிறந்த மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. இந்த இலக்கை அடையும் பொருட்டு, இதுபோன்ற சிறப்பு செயலாக்கத்தினை நமது மாநிலத்திலும் செயல்படுத்தும் விதமாக இத்துறையில் சில புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.2.2 துறையின் முயற்சிகள்

#### 3.2.2.1 புள்ளி விவர பகுப்பாய்வு பிரிவு (DAU)

தமிழ்நாடு அரசின் 2015–16 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கை உரையில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையுடன் இணைந்து புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பபட்டது. இம்மையம் புள்ளி விவரங்கள் அடிப்படையிலான உள்ளீடுகளை, உயர்மட்டக் கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகளுக்கு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பை அளிக்க உதவுகின்றது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் புள்ளி விவர பகுப்பாய்வுப் பிரிவு உலக சூழலுக்கேற்ப புள்ளி விவரங்களை

வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவைகளை சிறப்பாக ஆய்வு செய்யும் ஒரு பிரிவாகவும் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாட்டின் போது உருவாகும் அளவற்ற புள்ளி விவரங்களை அரிதாக ஆராய்ந்து, அவற்றின் மூலம் செயல்படுத்தக்கூடிய பயனுள்ள அறிக்கைகளை அளிக்கிறது.

நவீன தகவல் தொழில் நுட்பங்களை மற்றும் பயன்பாட்டு மென்பொருளை பயன்படுத்தி தொடர்புடைய புள்ளி விவரங்களை வழங்கி விரைவில் முடிவெடுக்க இம்மையம் உதவுகிறது. இம்மையம் மாநில அளவிலான தகவல் சேகரிப்பு இணைய முகப்பு ஒன்றை உருவாக்கி, அதன்மூலம் பல்வேறு துறைகளின் விவரங்களை விரைவாக மற்றும் துல்லியமாகத் தொகுத்து தேவையின் அடிப்படையில் அரசுக்கும் பிற துறைகளுக்கும் வழங்குவது இதன் சிறப்பம்சமாகும்.

புள்ளிவிவர பகுப்பாய்வு மையம் தற்போது நான்கு திட்டங்களை ஜே–பால் தெற்கு ஆசியாவுடன் இணைந்து செயல்படுத்தியுள்ளது.

(i) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் வழங்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கூற்றுகளின் தரவரிசைகளைப் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து ஐந்தாவது மாநில நிதி ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(iii) காணாமல் போன நபர்களின் புள்ளி விவரங்களை வைத்து அடையாளம் காணப்படாத இறந்த உடல்களுடன் ஒப்பிட்டு, மாநில குற்ற ஆவண காப்பகத்துடன்

இணைந்து அவர்கள் அடையாளங்களை பகுப்பாய்வு செய்தது.

(iv) சென்னை பெருநகர காவல்துறையில் பெறப்பட்ட அவசர கால எண் 100–ல் பெறப்பட்ட அழைப்புகள் தொடர்பான விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

2020–21 ஆம் ஆண்டு, சம்பந்தப்பட்ட துறையின் விருப்பத்திற்கேற்ப மூன்று திட்டங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அமைவிடப் பரப்பு சார்ந்த புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி குற்ற வரைபடம் தயாரித்தல் மற்றும் குற்ற பகுப்பாய்வு செய்வதற்காக ரூ.30.58 இலட்சத்தில் காவல் துறையின் மாநில குற்ற ஆவண காப்பகம் மூலம் குற்ற பகுப்பாய்வு செய்தல்.

இயந்திரங்கள் வழி கற்பித்தல் வாயிலாக ஜிஎஸ்டி வரி சேகரிப்பை மேம்படுத்த ரூ.4.50

இலட்சம் செலவில் வணிகவரித் துறை, புள்ளிஇயல் பகுப்பாய்வு மையம் மற்றும் ஜே–பால் நிறுவனம் மூலம் பகுப்பாய்வு செய்தல்.

தமிழக மாநிலத் தேர்தல்கள்–2021 தேர்தலை முன்னிட்டு பொது மக்கள் / வாக்காளர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் செயல்பாடுகள் (KAP) தொடர்பான அடிப்படை ஆய்வு ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

புள்ளி விவரங்களைப் பகிர்தலின் அவசியம் குறித்து ஒரு கருத்தரங்குத் தொடரை இம்மையம் உருவாக்கியுள்ளது. இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம், அரசின் கொள்கை முனைவோர்கள், ஆராய்ச்சியாளர்கள், புள்ளியியல் அறிவியலாளர்கள் இதுபோன்ற பிற தரப்பினரையும் ஓர் அமைப்பின் கீழ் கொணர்ந்து, அதன்மூலம் தற்போது உள்ள புள்ளி விவரங்களை

ஆராய்ந்து அனைத்து அரசின் கொள்கை வகுத்தலுக்கு உதவிபுரிதல்.

தரவு பகிர்வு கொள்கை கருத்தரங்குகளின் தொடர்ச்சியாக, 2021-22ஆம் ஆண்டில் அரசு துறைகளின் பெரிய புள்ளி விவரங்களை பகுப்பாய்வு செய்தல் தொடர்பான பல்வேறு கருத்தரங்குகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புள்ளிவிவர பகுப்பாய்வு மையத்தினை நிறுவவும், அதன் திறனை அடையாளம் காணவும் பெரியளவு புள்ளி விவரங்களை பகுப்பாய்வு செய்யவும் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து, அரசாணை எண். 20, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மூலம் மொத்த திட்ட செலவு ரூ.428.66 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.2.2.2 தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNHPS)

தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். தனிநபர் குடும்பங்கள் ஆகியவற்றை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியை கண்டறியும் வகையில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த விவரங்களைத் திட்டமிடுபவர்களும் மற்றும் பொதுமக்களும் உரிய நேரத்தில் தேவையான புள்ளி விவரங்கள் இந்த ஆய்வின் மூலம் கிடைக்கப்பெறுவர். பொது மக்களுக்கு ஆதாரப் பூர்வமான சான்றுகள் சார்ந்த கொள்கை

வகுத்தலுக்கும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வடிவமைப்பதற்கும் உதவிகரமாக இருக்கும்.

இந்த ஆய்வானது மூன்று கட்டங்களாக, முதற்கட்டம்: முன் அடிப்படை ஆய்வு / வீடுகளைப் பட்டியலிடுதல், இரண்டாம் கட்டம்: அடிப்படை ஆய்வு மற்றும் மூன்றாம் கட்டம்: இறுதி நிலை ஆய்வு என குறிப்பிட்ட ஆண்டுகளில் தொடர் ஆய்வாக நடத்தப்படுகின்றது. இந்த ஆய்வு பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை மேம்பாட்டு ஆய்வு நிறுவனம், சர்வதேச பங்குதாரரான அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சி ஆய்வு மையம் ஆகியோருடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை நடத்திய முதல் நீண்டகால ஆய்வு இதுவாகும். இவ்வாய்வின் முக்கிய

அம்சமானது கையடக்க கணினி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணலில் இலக்க முறையில் களப்பணியிலிருந்து விவரங்களை சேகரிப்பதாகும்.

முன் அடிப்படை ஆய்வு / வீடுகளை பட்டியலிடும் ஆய்வு பணி 2018–ல் நிறைவடைந்துள்ளது. மொத்தம் 2,51,594 குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பதிலளிக்காத வீடுகளில் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான மதிப்பீடுகளும் கணக்கிடப்படுகின்றன.

தமிழ்நாடு குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு திட்டத்திற்கு தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து அரசாணை (பலவகை) எண்.19, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.கு) துறை, நாள் 26.02.2016–இல், மொத்த திட்ட தொகையாக ரூ.390.00

இலட்சம் மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.2.3 தமிழ்நாடு கோவிட் களநிலவர ஆய்வு (TNCPS)

இக்கணக்கெடுப்பின் மாதிரி வீடுகளில் காலப்போக்கில் கோவிட் காரணமாக ஊரடங்கு நடவடிக்கைகளை மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ் (MIDS) உடன் இணைந்து பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மாநில அளவிலான விரைவான மறுமொழி தொலைபேசி கணக்கெடுப்பை TNHPS ன் கீழ் தொடங்கியது.

உலகளாவிய தொற்றுநோயின் மோசமான தாக்கத்தை மாற்றியமைக்கத் தகுந்த கொள்கை நடவடிக்கைகளை வடிவமைக்க தமிழக அரசுக்கு உடனடி நம்பகமான பயனுள்ள தரவை வழங்குவதே TNCPS–இன் முதன்மை நோக்கமாகும். வேலை நிலை (வேலை இழப்பு)

மற்றும் வீட்டு வருமானம் போன்ற முக்கிய மாறிகள் குறித்த தரவுகளை சேகரிக்க ஓரளவு முறை பயன்படுத்தப்பட்டது. இத்தொற்று நோய்களின்போது நேர்காணல் அட்டவணையை நிர்வகிக்க கணினி உதவி தொலைபேசி நேர்காணல் (CATI) முறை பயன்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு கோவிட் களநிலவர ஆய்வு அலை–1 கணக்கெடுப்பு ஜீன் 2020–இல் மேற்கொள்ளப்பட்டது.10,014 கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடும்பங்களின் மாதிரி அளவு வெற்றிகரமாக கணக்கெடுக்கப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன. அலை–2 கணக்கெடுப்பு 8,940 வீடுகளில் நடத்தப்பட்டு 2020 நவம்பரில் நிறைவடைந்து அறிக்கையின் முடிவுகள் வெளியிடப்பட்டன.பிப்ரவரி 2021–ஆம் ஆண்டில் 8,664 வீடுகளில் அலை–3 கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அறிக்கையின் முடிவுகள்

வெளியிடப்பட்டன. அலை–4 கணக்கெடுப்பு ஜீலை 2021–இல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.2.2.4 தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியல் ஆய்வு

வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை, உடல்ரீதியாக மற்றும் பொருளாதாரரீதியாக மற்றவர்களை சார்ந்திருத்தல், அறிவாற்றல் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை உட்கொண்ட சுகாதார நிலை ஆகியவற்றை அறிதல் மற்றும் சுகாதார அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை ஆகியவற்றை அறிந்து கொள்வது இந்த குழுப்பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். வயதுமுதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலையினைக் குறித்து தரவு தளம் உருவாக்கப்படும். மேலும், வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த தேவைப்படும் இலக்குகளை அடைய

ஒரு தனித்துவமான தளத்தை இந்த ஆய்வு வழங்கும். இந்த கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் உள்ள வயது முதிர்ந்தோரின் சுகாதாரம், பொருளாதார நிலை மற்றும் சமூக நல்வாழ்வை மையமாகக் கொண்டது.

இந்த குழு ஆய்வு, பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறையுடன், அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் தெற்கு ஆசியா, (ஜே–பால் தெற்கு ஆசியா) நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து எட்டு ஆண்டுகள் தொடர் ஆய்வாக இரண்டு வார கால இடைவெளியுடன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. இந்நிறுவனமானது (J–PAL) தொழில்நுட்ப ஆலோசகராகவும், தரக் கட்டுப்பாட்டாளராகவும் செயல்பட்டு வருகின்றது.

இந்தக் கணக்கெடுப்பு, டேப்லெட்டுகளைப் பயன்படுத்தி டிஜிட்டல் பயன்முறையில், அதாவது

கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (CAPI) முறையில் தரவு சேகரிக்கப்படுகிறது.

இந்த கணக்கெடுப்பின் கீழ் சுகாதார அளவீடுகள் மற்றும் உயிர் குறிப்பான்கள் முதன்முறையாக தமிழ்நாட்டில் சேகரிக்கப்படுகிறது. மேலும், நோய் சுமை, மனநலம் மற்றும் செயல்பாட்டு ஆரோக்கியம், சுகாதாரப் பாதுகாப்பு, முதியோரின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வு குறித்த நம்பகமான அறிவியல் தகவல்களும் இதில் அடங்கும்.

மனித மேம்பாட்டு குறியீடு மற்றும் சார்பு விகிதத்தின் அடிப்படையில் கணக்கெடுப்புக்கு சென்னை (பெருநகர பகுதி), திருவண்ணாமலை, தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. வீட்டுப் பட்டியல் ஜீலை 2018 மத்தியில் நிறைவடைந்தது, இந்த ஐந்து

மாவட்டங்களில் சுமார் 92,000 குடும்பங்கள் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டன.

வயதானவர்களுக்கு பொருத்தமான ஆதாரம் அடிப்படையில் கொள்கைகளை வடிவமைப்பதற்கும், முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது. சமூக பாதுகாப்புக் கொள்கை மற்றும் நிரல் உருவாக்கம் ஆகியவற்றை வடிவமைப்பதற்கும் ஆராய்ச்சிக்கான தளத்தை உருவாக்குவதற்கும் இது உதவியாக இருக்கும்.

அடிப்படை ஆய்வுப்பணி ஜூன் 2019–ல் நிறைவடைந்தது. 4739 குடும்பங்களில் 6294 வயது முதிர்ந்தவர்கள் உள்ளனர் என அடிப்படை ஆய்வில் உள்ள வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பில் உள்ளதாக பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை ஆய்வின் மூலம்

கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இவற்றுள், பொது சுகாதாரத் துறை மூலம் 4496 வயது முதிர்ந்தவர்களிடமிருந்து சுகாதார அளவீடுகள் விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது. திட்டப்பகுப்பாய்வு மேற்கொள்ளும் பணி முடிவு பெற்றுள்ளது. அடிப்படை கணக்கெடுப்பின் முடிவுகளை ஜே–பால் சமர்ப்பித்துள்ளது, மேலும் கணக்கெடுப்பின் எதிர்கால அலைகளில் சேர்க்கக்கூடிய முக்கிய புள்ளிகள் இதில் பரிந்துரைக்கப்பட்டன.

இந்த குழு கணக்கெடுப்பின் அலை–1 ஐ 2021–22 காலகட்டத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் மொத்த திட்ட தொகையாக ரூ.606.00 இலட்சம், அரசாணை (நிலை) எண்.21, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 27.02.2016–ன் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.2.2.5 தமிழக மாநிலத் தேர்தல் 2021 ஆண்டுக்கான பொதுமக்கள்/ வாக்காளர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த அடிப்படை ஆய்வு (KAP)**

இந்திய தேர்தல் ஆணையத்தால் முன்மொழியப்பட்ட முறையான வாக்காளர் கல்வியறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த கணக்கெடுப்பு (KAP) தமிழ்நாடு சட்ட மன்ற மாநிலத் தேர்தல் 2021 ற்கு முன்னர் நடத்தப்பட்டது. இவ்வறிக்கை 18.02.2021 அன்று தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கணக்கெடுப்பிற்கு இந்திய தேர்தல் ஆணையம் ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**3.2.3 துறையின் புதிய திட்ட முயற்சிகள்**

**3.2.3.1 நிகழ் காலத்திற்கான தரவை சேகரிப்பதற்கான நோக்கம்**

1. காலாண்டிற்கு ஒருமுறை தரவு சேகரிப்பை பயனாளர்களுடன் பகிர்தல்.
2. தேர்தல் அறிக்கையை செயல்படுத்துவதை கண்காணிக்க மின்னனு முறையில் தேர்தல் அறிக்கை சாதனை குறித்த கணக்கீட்டினை உருவாக்குதல்.
3. கணினிவழி ஆய்வு – (இயற்கை வளங்களை அடையாளம் கண்டு இணைத்தல்)
   (i). புவியியல் ஆய்வு
   (ii). புரப்புவியியல் ஆய்வு – மாநிலத்தில் உள்ள அனைத்து வளங்களின் பொருளாதார மதிப்பினை ஆராய்தல்.
4. துறைவாரியான வேலைவாய்ப்பு சாத்தியக் கூறுகளை அடையாளம் காண கணக்கெடுப்பு மேற்கொள்தல்; கல்வி நிறுவனம் மற்றும் தொழில் துறையுடன் இணைந்து வேலை வாய்ப்பிற்கான திறனை மேம்படுத்துதல்.

5. மாண்புமிகு முதலமைச்சரின் தொலை நோக்குத் திட்டத்தின்படி ஒரு டிரில்லியன் (ஒரு இலட்சம் கோடி) பொருளாதார இலக்கினை அடைவதற்கான வளங்களை உருவாக்குவதற்கான செயல்திட்டம் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டிற்கான இனங்களை கண்டறிந்து பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தி தொலைநோக்கு இலக்கினை அடைதல்.
6. அரசாங்கத்தின் தேவைக்கேற்ப நிகழ் காலத்திற்கான தரவினை சேகரித்தல்.

### 3.2.3.2 வெளிப்படையான புள்ளி விவரங்கள்

தமிழக அரசின் வெளிப்படையான அரசு புள்ளி விவரங்கள் TNOGD (Tamil Nadu Open Government Data) திட்டத்தின் வடிவமைப்பாக (Nodal Organization) மாநிலத்தின் தேசிய புள்ளி விவர பகிர்வு மற்றும் அணுகும் கொள்கையுடன்

(NDSAP) இணைந்து பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை செயல்படுகிறது. இந்த திட்டத்தில் TNOGD அமைப்பின்கீழ் https://tn.data.gov.in இணையதளம் ELCOT நிறுவனத்தினரால் வழங்கப்படுகிறது. TNOGD அரசாங்க புள்ளி விவரங்களை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. திணைக்களங்கள் மற்றும் பயனர்கள் புள்ளி விவரங்களை ஒரே இடத்தில் இணையத்தில் வெளியிடுவதற்கு இந்த இணையதளம் பயனுள்ளதாக இருக்கும். பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் வெளியிடப்பட்ட புள்ளி விவர கையேடு 2009முதல் 2019 வரை 11 ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்கள் TNOGD இணையதளத்தில் பகிரக்கூடிய வடிவத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் தேவைப்படும் போது பகுப்பாய்வு நோக்கங்களுக்காக பதிவிறக்கம் செய்யப்படலாம். மாவட்டப் புள்ளி விவர கையேடுகளும் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. புள்ளி விவர கையேட்டில் 42 அத்தியாயங்கள் உள்ளன. இதில் தமிழக அரசின்கீழ் வரும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வேலைவாய்ப்பு, கால்நடை பராமரிப்பு, தொழில்கள் மற்றும் வர்த்தகம், நகராட்சி மற்றும் உள்ளாட்சிகள் போன்ற 200க்கும் மேற்பட்ட துறைகளிலிருந்து புள்ளி விவரம் சேகரிக்கப்படுகிறது.

**3.2.3.3 வலைத்தளம்**

இத்துறைக்கான வலைத்தளம் ELCOT நிறுவனம் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இது 2021-22 ஆம் ஆண்டு முதல் https://des.tn.gov.in வலைத்தள முகவரியில் செயல்படும்.

### 3.2.3.4 பொதுகள ஆய்வு பயன்பாட்டு கட்டமைப்பு

புள்ளி விவரம் சேகரிப்பு நடவடிக்கைகளை களத்தில் நேரடியாக கணினிமயமாக்கும் பணியினை பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மேற்கொண்டு வருகிறது. கணினிமயமாக்கலின் காரணமாக இந்தத் துறை புள்ளி விவர சேகரிப்பை காகித அடிப்படையிலான கேள்விகளிலிருந்து கையடக்க சாதனங்களுக்கு அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (CAPI) பயன்முறையில் கையடக்க கணினி மூலம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இவ்விலக்கினை அடைய 16 திட்டங்களுக்கு தற்போது ELCOT நிறுவனம் மூலம் பொது கள ஆய்வு கணினிமயமாக்குதல் கட்டமைப்பை (CSAF) உருவாக்கியுள்ளது.

### 3.2.4 சமூகப் புள்ளிஇயல்

### 3.2.4.1 தேசிய மாதிரி கணக்கெடுப்பு

தேசிய மாதிரி கணக்கெடுப்பு 1950 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது இந்திய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் அடுத்தடுத்த சுற்றுகளில் நடத்தப்பட்ட ஒரு சமூக பொருளாதார ஆய்வு ஆகும். இது அறிவியல் மாதிரி முறைகளைப் பயன்படுத்தி புள்ளி விவரங்களை சேகரிக்கும். பல்வேறு நிலைகள் கொண்ட ஓரடுக்கு வடிவமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு பல்வேறு பொருள்கள் குறித்து சேகரிக்கப்பட்ட மாதிரி தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை வழங்குகிறது.

தேசிய மாதிரி ஆய்வு 75 வது சுற்று (ஜூலை 2017 முதல் ஜூன் 2018) வரை நடைபெற்றது. "குடும்ப நுகர்வுச் செலவினங்கள்,

சமூக நுகர்வு–சுகாதாரம், கல்வி" ஆகிய தலைப்புகளின் கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

· தேசிய மாதிரி ஆய்வு 76 வது சுற்று (ஜூலை 2018 முதல்டிசம்பர் 2018 வரை) "குடிநீர், சுகாதாரம், வீட்டு வசதிநிலை மற்றும் மாற்றுத் திறனாளிகள் குறித்த ஆய்வு" ஆகியவற்றின் மீதான கணக்கெடுப்பு நடத்தப்பட்டன.

தேசிய மாதிரி ஆய்வு 77 வது சுற்று (ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019) வரை நடைபெற்றது. "நிலம் மற்றும் கால்நடைகள் வைத்துள்ள விவசாயக் குடும்பங்களின் நிலை மற்றும் கடன் மற்றும் முதலீடு" குறித்த ஆய்வு ஆகியவைகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

தேசிய மாதிரி ஆய்வு 78 வது சுற்று (ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020) "உள்நாட்டு சுற்றுலா செலவினங்கள் மற்றும் பலகாட்டி ஆய்வு (Multiple Indicators Survey)" ஆகியவைகள்

குறித்த விவரங்கள் சேகரிக்க திட்டமிடப்பட்டன. கொரானா–19 பெருந்தொற்று காரணமாக உள்நாட்டு சுற்றுலா குறித்த ஆய்வு கைவிடப்பட்டது. மேலும், பலகுறிகாட்டிகள் குறித்த ஆய்வு (Multiple Indicators Survey)–க்கான கால அளவு மார்ச் 2021 வரை நீட்டிக்கப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டன. தேசியமாதிரி ஆய்வு சுற்றுக்களில் பலகுறிகாட்டி ஆய்வு (Multiple Indicators Survey) என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**3.2.4.2 வீட்டு வசதி புள்ளிஇயல்**

தேசிய அளவில் வீட்டு வசதி கொள்கை மற்றும் வீட்டு வசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளின் கட்டிடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. இந்த தரவு பரவலாக கட்டுமானத்தின் தன்மை மற்றும் வகை,

அஸ்திவாரம் மற்றும் மாடி பகுதி, வசிக்கும் அலகுகளின் எண்ணிக்கை, குடியிருப்பு மற்றும் மதிப்பிடப்பட்ட செலவு போன்றவற்றை உள்ளடக்கியது.

(i) 2020-21ஆம் ஆண்டில் பொதுத்துறைக்கு பொதுத்துறை நிறுவனங்களிலிருந்தும், தனியார் துறைக்கு 151 நகரங்களிலிருந்தும் விவரங்கள் பெறப்படுகின்றன.

(ii) 2019-20 வரை தனித்தனியாக பொதுத்துறை மற்றும் தனியார் துறைக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசு துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 3.2.4.3 வீடு கட்டத் தொடங்கும் குறியீடு (HSUI)

புதிதாக கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்ட விவரங்களிலிருந்து கட்டிட வளர்ச்சி குறியீட்டு எண் அளவுகளைத் தெரிந்து கொள்ளவும்,

பொருளாதார வளர்ச்சிக்கு கட்டிட புள்ளிஇயல் விவரங்களின் பங்கினை அறிந்து கொள்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வீட்டுவசதி மற்றும் நகர்புற வறுமை ஒழிப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய கட்டிட நிறுவனம் (NBO) புதுடெல்லி, வீட்டுவசதி மற்றும் கட்டிட புள்ளி விவரங்களின் அடிப்படையில் வீட்டுவசதி தொடக்க குறியீட்டை(HSUI) ரிசர்வ் வங்கியுடன் இணைந்து உருவாக்குகிறது. தமிழ்நாட்டில் 17 நகரங்கள் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை) தரவு சேகரிப்பு மற்றும் பரிமாற்றத்திற்காக 2014–15ஆம் ஆண்டில் இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டன.

2020–21ஆம் ஆண்டு வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 நகரங்களிலிருந்து வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு நேரடியாக இணையவழி

வாயிலாக தேசிய கட்டிட நிறுவனம், புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 3.2.4.4 கட்டிடக் குறியீட்டெண் (BCCI)

கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் காலாண்டிற்கு ஒருமுறை 16 மாவட்ட மையங்களில் இருந்து (சென்னை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், பாளையங்கோட்டை, நாகர்கோவில் மற்றும் உதகமண்டலம்) சேகரிக்கப்படுகின்றன. அடிப்படை ஆண்டு 1999−2000=100 அடிப்படையில் கட்டிடக் குறியீட்டெண் கணிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

31.03.2021 முடிவடைந்த காலாண்டில் 16 மையங்களுக்கான கட்டிட கட்டுமான செலவின்

குறியீடுகள் அறிக்கைகள் தயாரித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

### 3.2.5 தொழிற் புள்ளி விவரங்கள்

#### 3.2.5.1 ஆண்டுத் தொழில் ஆய்வு

மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii) ன் கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கான முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்த தொழிற்சாலை விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் மூலம் தமிழ்நாடு ஆண்டுத் தொழில் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்கள் உற்பத்தி துறையிலிருந்து வருமான மதிப்பீட்டினை கணக்கீடு, மாநில வருவாய் மதிப்பீட்டினை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தற்போது ஆண்டுத் தொழில் ஆய்வு 2018–19 ஆம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 2019–20 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் ஆய்வு மூலம் மேற்கண்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு கூர்ந்தாய்வு பணி நடைபெறுகிறது.

**3.2.5.2 தொழில் உற்பத்தி குறியீட்டெண்**

தொழில் உற்பத்தி குறியீட்டெண், 2011–2012 ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு மாநில அளவில் உள்ள தொழிற்சாலைகளின் பொதுவான காரணிகளான உற்பத்தி விவரங்கள் மற்றும் பொருளாதார நிலைமையினை மதிப்பிட உதவுகிறது. மாதாந்திர அடிப்படையில் கனிமம் மற்றும் சுரங்கத் துறை, உற்பத்தித்துறை மற்றும் மின்சாரம் ஆகிய மூன்று முக்கிய தொழில் அமைப்புகளிலிருந்து உற்பத்தி குறித்த விபரங்கள் சேகரிக்கப்படுகிறது.

2011–12 ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்திர அறிக்கை, மூன்று துறைகளிலிருந்து பெறப்படுகின்ற உற்பத்தி விவரங்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கனிம உற்பத்தி விவரங்கள், (8 வகைகள்) கனிமம் மற்றும் சுரங்கத் துறை, கிண்டி, சென்னை–32 லிருந்தும், மின்சார உற்பத்தி, மத்திய மின் வாரியம், புது டில்லியிலிருந்தும், தொழிற்துறை உற்பத்தி விவரங்கள் 1244 தொழிற்சாலைகளிடமிருந்து நேரடியாக உரிய படிவங்களில் பெறப்பட்டு துறை வாரியான மற்றும் பயன்பாடு வாரியான குறியீட்டெண்கள் 253 இனங்களுக்கு ஒவ்வொரு மாதமும் கணிக்கப்படுகின்றன.

### 3.2.5.3 கைத்தறி

ஒவ்வொரு காலாண்டிலும் தமிழகத்தில் கைத்தறித் துணியின் மொத்த உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு சதவீதத்தை மதிப்பிடுவதும், ஒவ்வொரு ஆண்டும் கைத்தறி நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளைக் கண்டறிவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னை, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 170 குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கைத்தறி திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்சமயம் 2020–2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.


### 3.2.6 வேளாண்மை புள்ளி விவரங்கள் சேகரித்தல்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, மாநில வேளாண்மை புள்ளி இயல் ஆணைக் குழுவாக (State Agricultural Statistics Authority – SASA) செயல்பட்டு வருகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மை துறையினை சார்ந்துள்ளதால், இத்துறை மாநில பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. இத்துறையில் வேளாண்மை புள்ளி விவரம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப்பயன்பாடு, நீர்பாசனம், நில உடைமை, பயிர்க் காப்பீடு, விவசாயக்கூலி, விவசாயிகளின் விளைச்சலின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகளை

மேற்கொள்வதற்குப் பயன்படுகிறது.

இத்துறையில் கீழ்க்கண்ட பல்வேறு விவசாயம் சார்ந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.2.6.1 பருவமும் பயிரும் அறிக்கை (2020-21)




மாவட்ட வாரியாக உணவுப் பயிர் மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பு, நில பயன்பாடு, நீர்பாசன ஆதாரங்கள், நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி விகிதம் ஆகியவற்றினை மதிப்பீடு செய்து ஒவ்வொரு ஆண்டும் வெளியீடு செய்யப்பட்டு

ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் இதர துறைகளுக்கும் அனுப்பபட்டு வருகிறது.

மேலும், இவ்வறிக்கையில் மழைப் புள்ளி விவரம், வேளாண் சார்ந்த பொருட்களின் விலைவாசி நிலவரம், விவசாயக் கூலி மற்றும் விவசாயப் பொருளாதார குறியீடு ஆகிய விவரங்களும் அளிக்கப்படுகின்றன. 2019–20 ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2020–21ஆம் ஆண்டிற்கான இறுதி அறிக்கைக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.2.6.2 பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு**

ஜமாபந்தியில் பயிர்ப் பரப்பு விவரங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன்பாகவும், பயிர் அறுவடை பரிசோதனைகளின் அடிப்படையில் இறுதி உற்பத்தி விகிதம் கணக்கிடப்படும்

முன்னர், 56 முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு செய்யப்படுகிறது.

### 3.2.6.3 பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டம் (நெல், தானியங்கள், பயிறு வகைகள் எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி)

பொது பயிர் மதிப்பீட்டய்வு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், உணவு மற்றும் உணவல்லாத 17 முதன்மைப் பயிர்களுக்கு மொத்தம் 9,500 அறுவடைப் பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைகள் வேளாண் துறை அலுவலர்களால் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை அலுவலர்களால் இப்பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. பயிர் அறுவடைப்

பரிசோதனைகளின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் விளைச்சல் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு வருகிறது.

**3.2.6.4 பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான பயிர் அறுவடைப் பரிசோதனை**

இத்துறையினரால் மேற்கொள்ளப்படும் பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒரு ஹெக்டெர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதற்காகும்.

| பழம் / காய்கறிகள் | உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | | |
|---|---|---|---|
| | 2017-18 | 2018-19 | 2019-20 |
| மா | 579929 | 524339 | 494728 |
| வாழை | 3044122 | 3484599 | 3987895 |
| பலா | 43562 | 54681 | 50056 |
| திராட்சை | 55603 | 45967 | 33106 |
| கொய்யா | 45698 | 44667 | 41504 |

| | | | |
|---|---|---|---|
| ஆரஞ்சு | 2028 | 2334 | 4723 |
| எலுமிச்சை | 13167 | 16301 | 15658 |
| அன்னாசி | 31486 | 30286 | 32463 |
| தக்காளி | 319090 | 396654 | 575141 |
| வெண்டை | 79189 | 80590 | 175243 |
| கத்தரி | 123255 | 137542 | 275956 |
| முட்டைகோசு | 131332 | 91478 | 185961 |
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு | 7946 | 8854 | 14383 |

இத்திட்டத்தின் கீழ், முக்கிய தோட்டக்கலை பயிர்களான மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய 8 பழவகைப் பயிர்களுக்கும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய 5 காய்கறிப் பயிர்களுக்கும் அறுவடைப் பரிசோதனைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் தோராயமாக ஒவ்வொரு ஆண்டும் 720 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1440 பயிர்

அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| சிறுபான்மைப் பயிர் | உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | | |
|---|---|---|---|
| | 2017–18 | 2018–19 | 2019–20 |
| மிளகாய் | 18108 | 14000 | 29618 |
| வெங்காயம் | 214642 | 218595 | 261835 |
| மஞ்சள் | 73134 | 92361 | 96254 |
| உருளைக்கிழங்கு | 68517 | 49384 | 84720 |
| கொத்தமல்லி | 4112 | 2526 | 3675 |
| மரவள்ளிக்கிழங்கு | 2715116 | 2629655 | 3065106 |
| முந்திரி | 19279 | 19701 | 25687 |
| இஞ்சி | 7425 | 7279 | 3038 |


சிறுபான்மைப் பயிர் திட்டத்தின் கீழ் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய 8 சிறுபான்மைப் பயிர் அறுவடை பரிசோதனைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தோராயமாக ஒவ்வொரு ஆண்டும் 637 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1274 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.2.6.5 பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டதின் கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணக்கிடப்பட்டு, புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்புகள் ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிர்களுக்கு சேதம் ஏற்படும் போதும், விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையினரால் பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு மேற்பார்வையிடப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டுக்கு காரிப் பருவத்திற்கு 31 பயிர்களுக்கு 77,482 பரிசோதனைகளும், சிறப்பு பருவத்தில் 4 பயிர்களுக்கு 44,152 பரிசோதனைகளும் மற்றும் ராபி பருவத்தில் 32 பயிர்களுக்கு 60,818

பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு சராசரி விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவில் தொடர்புடைய துறையினரால் ஒத்திசைவு செய்யப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்ப் பரப்பு விவரங்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் காப்பீட்டுக் கழகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

**3.2.6.6 தென்னை மற்றும் கமுகு பயிர் மதிப்பீட்டாய்வு**




தென்னை மற்றும் கமுகு மரங்களின் எண்ணிக்கை

கணிக்கப்படுதல், காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை, ஒரு தென்னை மற்றும் கமுகு மரத்தின் சராசரி உற்பத்தி விகிதம், மாநில / மாவட்ட அளவில் ஒரு ஆண்டிற்கான மொத்த உற்பத்தி ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை மற்றும் கமுகு பயிரின் ஆய்வுக் காலம் ஜீலை முதல் ஜீன் வரை கொண்ட பசலி ஆண்டு ஆகும். 2020–2021ஆம் ஆண்டு இவ்வாய்வினை நடத்துவதற்காக தென்னை பயிருக்கு 379 கிராமங்களும், கமுகு பயிருக்கு 64 கிராமங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**3.2.6.7 மழைப்புள்ளி விவரம் சேகரிப்பு**

மழைப் புள்ளி விவரங்கள் வருவாய்த் துறை, பொதுப்பணித்துறை, வனத்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இந்திய வானியல் ஆய்வுத் துறை போன்ற துறைகளால் பேணப்படும் 604 சாதாரண / தானியங்கி மழைமானி

நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படுகிறது. இம்மழைப் புள்ளி விவரங்கள் மாதம், பருவம் மற்றும் ஆண்டு வாரியாக தொகுக்கப்பட்டு அறிக்கையாக பேணப்பட்டு வருகின்றன.

### 3.2.6.8 நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்க தரவுகள்

நீர்ப்பாசன தரவுகள் கீழ்கண்ட மூன்று தலைப்புகளில் சேகரிக்கப்படுகிறது. அவை, ஆதார வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு மற்றும் நீர்த்தேக்கங்கள் மூலமாக பாசனத்திற்கு பயன்படும் பரப்பு போன்றவையாகும். இத்தரவுகள் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளிலிருந்து சேகரிக்கப் படுகின்றன.ஒவ்வொரு ஆண்டும், வட்ட, மாவட்ட அளவில் நீர்ப்பாசனச் சிற்றேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

### 3.2.6.9 விவசாயக்கூலி

விவசாயக்கூலி விவரங்கள் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தலா ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றது. அக்கிராமங்களில் விவசாயத் தொழில்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் நிலவும் கூலி விவரங்கள் களப் பணியாளர்களால் நேரடியாகச் சென்று சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் கணிக்கப்பட்டு அறிக்கைகளாக மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

### 3.2.6.10 விற்பனை மிகுதித் திட்டம்

விற்பனை மிகுதித் திட்டத்தின் நோக்கம் மூன்றுபருவங்களின் (குறுவை, சம்பா மற்றும் கோடை) இறுதியில் உற்பத்தியில் மீதம் உள்ள நெல்லின் அளவினை கணக்கிடப்படுவதற்கு நெல் உற்பத்திக்காக வழங்கப்பட்ட கூலிக்கான

நெல், விதைக்க மற்றும் சொந்த நுகர்வுக்கான நெல் போன்றவைகள் தவிர்த்து, விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

### 3.2.7 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள்

#### 3.2.7.1 பயிர் பரப்பு விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் (TRS)

ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் எதேச்சை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கிராமங்களில் நில பயன்பாட்டு புள்ளி விவரங்கள் பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர் பரப்பில், உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் பயிர் விவரங்கள், 9 முக்கிய பயிர்களுக்கு குறுவை, சம்பா மற்றும் கோடை ஆகிய மூன்று பருவங்களுக்கு சேகரிக்கப்படுகின்றன. கிராமப் பதிவேடுகள் சரிவர பேணப்பட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு

வருவாய்த் துறை மூலம் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2020–21ஆம் ஆண்டு 3,481 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பயிர் பரப்பு விவரங்கள் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு, மாநில அளவிலான விவரங்களுடன் தொகுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

**3.2.7.2 பயிர் மேம்பாட்டுத் திட்டம் (ICS)**

பயிர் மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் மாநில அளவில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் மாதிரி சோதனையாக கிராம நிர்வாக அலுவலர்களால் பேணப்படும் பதிவேடுகளில் பயிர் பரப்பு மற்றும் அடங்கலில் கிராமத்திற்கான பக்கவாரியான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் பராமரிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவு பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை

நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் ஆகும்.

இத்திட்டத்தின் நோக்கமானது, முதன்மை களப்பணியாளர்களாகிய கிராம நிர்வாக அலுவலர்களால் மாநில அளவில் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களின் முறையில் காணப்படும் குறைபாடுகளை, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு அலுவலர்களால் மேற்பார்வை மூலம் கண்டறிந்து அவற்றை களைய தக்க வழி வகைகளை இத்திட்டத்தின் மேம்பாட்டிற்காக பரிந்துரை செய்வதாகும்.

இத்திட்டத்தின் முடிவுகளை ஒன்றிய அரசின் தேசிய புள்ளிஇயல் அலுவலகம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடுகள் ஆகிய முதன்மைத் தரவுகளின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

### 3.2.7.3 வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு 1970–71 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. 2015–16 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்ட பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பின் மூன்று கட்டப் பணிகளும் முடிவடைந்து ஒன்றிய அரசுக்கு அனுப்பபட்டுள்ளன. இந்த கணக்கெடுப்பு முக்கிய காரணிகளான வேளாண் கைப்பற்றுகளின் வகைகள் (தனி, கூட்டு, மற்றும் நிறுவனம்) குத்தகைத் தன்மை, நிலக்கைப்பற்றுதாரர்களின் சமூக நிலை, நிலப் பயன்பாடு, நீர்பாசன தன்மை, பயிரிடும் வகை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடு போன்ற முக்கிய தகவல்களை அளிக்கின்றன.

### 3.2.8 மாநில வருவாய் புள்ளி விவரங்கள் மதிப்பீடு

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை அளவிடுவதற்கு மாநில வருவாய் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார பெருமொத்த காரணிகள் மாநிலத்தின் வளர்ச்சியின் நிலையை கணிக்க அவசியமான ஒன்றாக விளங்குகின்றன. மேலும், அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை கணிக்கவும் அரசு நிதி நிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

### 3.2.8.1 மாநில வருவாய்

மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின் கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வருவாய் மதிப்பீடுகள் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011–12 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டிற்கு 2018–19 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2019–20 ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடு மற்றும் 2020–21 ஆம் ஆண்டிற்கு முன்மதிப்பீடு ஆகிய மதிப்பீடுகள் நடப்பு மற்றும் நிலையான (2011–12)

**விலையில் கணிக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.**

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு

| அடிப்படை ஆண்டு (2011–2012) | | | | | | | | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு | | | | நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு | | | |
| வ. எண். | ஆண்டு | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (ரூ) | நிலையான (2011–12) விலையில் | வளர்ச்சி விகிதம் (ரூ) | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (ரூ) | நிலையான(2011–12) விலையில் | வளர்ச்சி விகிதம் (ரூ) |
| 1 | 2011–12 | 751486 | – | 751486 | – | 674478 | – | 674478 | – |
| 2 | 2012–13 | 854825 | 13.75 | 791824 | 5.37 | 768295 | 13.91 | 709343 | 5.17 |
| 3 | 2013–14 | 968530 | 13.3 | 851976 | 7.6 | 858870 | 11.79 | 750416 | 5.79 |
| 4 | 2014–15 | 1072678 | 10.75 | 893915 | 4.92 | 957350 | 11.47 | 791915 | 5.53 |
| 5 | 2015–16 | 1176500 | 9.68 | 967562 | 8.24 | 1057084 | 10.42 | 862437 | 8.91 |
| 6 | 2016–17 | 1302639 | 10.72 | 1036762 | 7.15 | 1171973 | 10.87 | 922084 | 6.92 |
| 7 | 2017–18 | 1465051 | 12.47 | 1125793 | 8.59 | 1317984 | 12.46 | 1000308 | 8.48 |
| 8 | 2018–19 ( தி.ம.) | 1630209 | 11.27 | 1204667 | 7.01 | 1468449 | 11.42 | 1071602 | 7.13 |
| 9 | 2019–20 ( து.ம) | 1797229 | 10.25 | 1278559 | 6.13 | 1619720 | 10.30 | 1133438 | 5.77 |
| 10 | 2020–21 (மு.ம) | 1902689 | 5.87 | 1296659 | 1.42 | 1716544 | 5.98 | 1151371 | 1.58 |

**தி.ம. – திருத்திய மதிப்பீடு ; து.ம – துரித மதிப்பீடு ; மு.ம.– முன் மதிப்பீடு**

### தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி)

(ரூபாயில்)

| வ. எண். | ஆண்டு | நடப்பு விலையில் | நிலையான (2011–12) விலையில் |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 93112 | 93112 |
| 2 | 2012–13 | 105340 | 97257 |
| 3 | 2013–14 | 116960 | 102191 |
| 4 | 2014–15 | 129494 | 107117 |
| 5 | 2015–16 | 142028 | 115875 |
| 6 | 2016–17 | 156595 | 123206 |
| 7 | 2017–18 | 175276 | 133029 |
| 8 | 2018–19 ( தி.ம.) | 194373 | 141844 |
| 9 | 2019–20 ( து.ம) | 213396 | 149329 |
| 10 | 2020–21 (மு.ம) | 225106 | 150990 |

தி.ம. – திருத்திய மதிப்பீடு; து.ம. – துரித மதிப்பீடு; மு.ம.– முன் மதிப்பீடு;

மாவட்ட வருவாய் மதிப்பீட்டின் புதிய வெளியீடு 2011-12 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2011-12இல் இருந்து 2018-19 (தற்காலிகம்) வரை, நடப்பு மற்றும் நிலையான விலையில் மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**3.2.8.2 மாநில கணக்கு**

தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை பொருளாதாரம் மற்றும் செயல்நோக்கு அடிப்படையில் 2018-19 (Accounts), 2019-20 (Accounts), 2020-21 (RE) ஆகிய ஆண்டுகளுக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குப் பிரிவு, உள்நாட்டு மொத்த உற்பத்தி மற்றும் மூலதன கணக்கு உருவாக்க மதிப்பீட்டிற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதார மற்றும் செயல்நோக்கு அடிப்படையில் தணிக்கை

செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அதாவது தமிழ் நாட்டிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி (15), நகராட்சி (121), ஊராட்சி ஒன்றியம் (385) மற்றும் பேரூராட்சி (528) ஆகியவற்றிக்கு வரவு மற்றும் செலவுகள் 2018–19 மற்றும் 2019–20 (P) ஆம் ஆண்டிற்கு கணக்குகள் தொகுக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 3.2.8.3 மூலதன ஆக்கம்

மத்திய புள்ளியியல் அலுவலகம் வழிகாட்டுதலின் படி மாநில பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணக்கிடப்படுகின்றன. இம்மதிப்பீடுகள் அரசிற்கு சரியான கொள்கை முடிவு எடுப்பதற்கும், நாட்டின் பொருளாதார திட்டமிடுதலுக்கும் பயன்படுகின்றன. தமிழ் நாட்டிற்கான பொதுத்துறைக்கான மொத்த நிலையான மூலதன

ஆக்க (GFCF), மதிப்பீடுகள் புதிய அடிப்படை ஆண்டை (2011–12) கொண்டு 2011–12 முதல் 2018–19 ஆகிய ஆண்டு வரை கணிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.9 விலைவாசி மற்றும் விலைக் குறியீட்டெண்கள்

#### 3.2.9.1 அங்காடி புலனாய்வு மற்றும் விலை புள்ளி விவரம்

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண் சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. வாரந்திர அறிக்கைகளை சேகரித்து, மாதந்திர அறிக்கைகளாக தொகுத்து அறிக்கையாக மத்திய தொழிலாளர் செயலகம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,

தேங்காய் மேம்பாட்டு வாரியம், இந்திய உணவுக் கழகம் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டு வருகிறது மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சிறைத்துறை, அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் பிறதுறைகளிலிருந்து விலை விவரங்கள் கோரப்படும்போது அவ்விவரங்கள் அளிக்கப் படுகிறது.

அரசின் கொள்கை முடிவு மற்றும் குறியீட்டெண்கள் கணிப்பதற்கு விலை விவரங்கள் பயன்படுகிறது.

**3.2.9.2 மொத்த விலை குறியீட்டெண்**

வேளாண்மை மற்றும் வேளாண்மை தொழில் சாராத பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் 2011–2012=100–ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது.

### 3.2.9.3 தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, சேலம், மதுரை, குன்னூர், கோயமுத்தூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய 7 மத்திய மையங்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் செயலகத்தால் 2016 = 100 ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. அதற்கான விலை விவரங்கள் அந்தந்த மையங்களிலிருந்து சேகரித்து நேரடியாக சிம்லாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கடலூர், நாகர்கோயில், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 4 மாநில மையங்களுக்கு 2011 =100 ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள்

மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது. நுகர்வோர் விலை குறியீட்டெண்களைக் கொண்டு அகவிலைப்படி தினக்கூலி, மற்றும் குறைந்தபட்ச கூலி ஆகியவை கணக்கிடப்படுகின்றன.

**3.2.9.4 மாவட்ட அளவிலான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் (கிராமப்புறம், நகர்ப்புறம், இணைந்தது)**

மாவட்ட அளவிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் திட்டங்களை பரவலாக்குவதற்கும், மாவட்ட அளவிலான விலை நிலவரப் போக்கினை அறிந்து கொள்வதற்கும், குறிப்பிட்ட மண்டலம் அல்லது மாவட்டத்திற்குரிய கொள்கைகளை வகுப்பதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் பயன்படுகிறது.

மத்திய புள்ளிஇயல் அலுவலகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2019–2020–ஐ

அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிப்பதற்கு தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களில் உள்ள 153 கிராமப்புற மையங்கள் மற்றும் 145 நகர்ப்புற மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன, பொருட்களின் தொகுப்பு (Commodity Basket) மற்றும் அடிப்படை ஆண்டு விலை விவரங்கள் (Fixation of Base Year Price) இறுதி செய்யப்பட்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.10 பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு என்பது வேளாண் மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்கள் (பயிர் உற்பத்தி, மலைத் தோட்டப் பயிர், பொது நிர்வாகம், இராணுவம், கட்டாய

சமூகப் பாதுகாப்பு ஆகியவை தவிர) உற்பத்தி சார்ந்த அல்லது சேவைகளுடன் தொடர்புடைய அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் கணக்கிடுதலாகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் புவியியல் எல்லைக்குள் அமைந்திருக்கும் அமைப்புசாரா நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களின் எண்ணிக்கையினை வழங்குகிறது. இது வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பை கொண்டுள்ளது. மேலும், பொருளாதாரக் கணக்கெடுப்பானது பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மற்றும் செயல்படுத்துவற்கு தேவைப்படும் தொழில் முனைவோர் குறித்த புள்ளி விவரம், நிறுவனங்கள் குறிப்பாக அமைப்புசாரா

நிறுவனங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை வழங்குவதாகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் கட்டமைப்பு மாறிகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. மேலும், பொருளாதாரக் நடவடிக்கைகளின் புவியியல் பரவல் நிறுவனங்களின் உரிமையாளர் வகை, பணியாளர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை வழங்குகிறது. பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் சமுக பொருளாதாரக் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மிகவும் பயன்படுகிறது.

பொருளாதாரக் கணக்கெடுப்பு இந்திய அரசின் திட்டமாகும், இது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இதுவரை ஆறு பொருளாதாரக் கணக்கெடுப்புகள்

மேற்கொள்ளப்படுள்ளன. மத்திய அரசால் இதுவரை நடத்தப்படுள்ள அனைத்து பொருளாதாரக் கணக்கெடுப்புகளிலும் தமிழ்நாடு பங்குபெற்றுள்ளது. தற்போது நடைபெறுவது ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

இந்திய அரசின் புள்ளிஇயல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தினால் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாநில அளவில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பில் தொடர்புடைய மாநில துறைகளை ஒருங்கிணைக்கும் துறையாக பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை செயல்படுகிறது.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் மேம்படுத்தப்பட்ட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு தொழில் நுட்ப பணிகள் இந்திய

அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில நுட்ப அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட Common Service Center, e–Governance Services India Limited–SPV என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியினை செயல்படுத்துவது Common Service Center, e–Governance Services India Limited நிறுவனமாகும் (இந்திய அரசின் அரசிதழ் எண்.1749, நாள்: 13.06.2019 இன்படி).

கணக்கெடுப்பு பணி மற்றும் முதல் நிலை மேற்பார்வை பணி (100% மேற்பார்வை) Common Service Center, e–Governance Service India Limited நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணியில் 10% இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. இரண்டாம் நிலை மேற்பார்வை பணியில் தேசிய மாதிரி ஆய்வு

அலுவலர்கள் மற்றும் மாநில அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணி தமிழ்நாட்டில் சுமூகமாக நடைபெற மாநில ஒருங்கிணைப்புக்குழு (SLCC), மாவட்ட ஒருங்கிணைப்பு குழு (DLCC) – (சென்னை நீங்கலாக) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்பு குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு–2019 களப்பணி "மாண்புமிகு தமிழக ஆளுநர்" அவர்களால் 09.10.2019 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது.அதனைப் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் துவக்கி வைக்கப்பட்டது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி தற்போது நிறைவடையும் தருவாயில் உள்ளது.

### 3.2.11 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

#### 3.2.11.1 குறிகாட்டிகளின் கட்டமைப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பதற்கு, அதன் குறிக்காட்டிகள் முதுகெலும்பாக திகழ்கின்றன. அதன் அடிப்படையில், சம்பந்தப்பட்ட துறைகளுடன் நடத்தப்பட்ட தொடர் கலந்துரையாடல்களின் அடிப்படையில், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறிகாட்டிகளுக்கான வரையறை முடிவு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் மாநில குறிக்காட்டிகள் 314, மாவட்ட குறிகாட்டிகள் 104 மற்றும் வட்டார குறிக்காட்டிகள் 93 என்று குறிக்காட்டிகளின் கட்டமைப்பினை அரசு இறுதி செய்துள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மாநில, மாவட்ட மற்றும் வட்டார குறிக்காட்டிகளின் தொகுப்பு மற்றும் ஒவ்வொரு குறிக்காட்டியும் கணக்கீடும் முறை கொண்ட கையேடு ஒன்று

20.10.2020 அன்று நடைபெற்ற உலக புள்ளி இயல் தின கொண்டாட்டத்தின் போது வெளியிடப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதலின் ஒரு பகுதியாக, நகர்ப்புற (Urban) மற்றும் மீள் குடியேற்ற (Resettlement) குறிக்காட்டிகள் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட துறைகளுடனான கலந்துரையாடல்களின் கருத்தின் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இப்பகுதிகளின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தினை நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மூலம் கண்காணிக்க இயலும், இப்பணி முடிவுற்று நகர்புற குறிக்காட்டிகள் மற்றும் மீள்குடியேற்ற குறிகாட்டிகள் விரைவில் வெளியிடப்படும்.

இத்துறையால் ஜீலை 2021–இல் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தரவு தாள் (Fact Sheet–2020) வெளியிடப்பட்டுள்ளது.

**3.2.11.2 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மின்னணு பலகை (SDG Dashboard)**

சம்பந்தப்பட்ட தொடர்புத் துறைகள் (Line Departments) தங்களுடைய குறிக்காட்டிகளின் புள்ளி விவரங்களை இணைய வழி மூலம் மின்னணு பலகையில் உள்ளீடு செய்ய ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)யால் உருவாக்கப்பட்ட இம்மாநில மின்னணு பலகை மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஜனவரி–2021 முதல் பயன்பாட்டில் உள்ளது. இப்பணியில் இத்துறையின் பங்கு மிக முக்கியமானதாகும். மறுசீரமைப்பு செய்யப்பட்ட மின்னணு பலகையில், மாவட்ட குறிக்காட்டிகள் மற்றும் வட்டார குறிக்காட்டிகளின் புள்ளி விவரங்களை உள்ளீடு செய்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

இப்பலகையில் இலக்குகள், குறிக்காட்டிகளின் செயல்திறனை காண காட்சிப்படுத்துதல் அமைப்பு உள்ளன.

**3.2.11.3 திறன் மேம்பாடு**

மின்னணு பலகையில் குறிக்காட்டிகளின் புள்ளி விவரங்களை உள்ளீடு செய்வதற்கு மற்றும் குறிக்காட்டிகள் பற்றிய விவரங்கள் தொடர்பாக பயிற்சி வகுப்புகள் சம்பந்தப்பட்ட துறைகளின் ஒருங்கிணைக்கும் அதிகாரிகளுக்கு மற்றும் இத்துறையின் அலகுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

**3.2.11.4 பயிலரங்கம் / கருத்தரங்கம்**

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இலக்கு 5, பாலின சமத்துவம் மற்றும் இலக்கு 16 அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் ஆகியவற்றின் கீழ், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான கருத்தரங்கு தொடர் இத்துறையால் 02.12.2020 முதல்

09.12.2020 வரை ஐ.நா சபையின் மகளிர் அமைப்பு (UNWOMEN) மற்றும் யுனிசெப் (UNICEF) அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கு தொடரில் ஐ.நா சபையின் மகளிர் அமைப்பு மற்றும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள், துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**3.2.11.5 கண்காணித்தல்**

இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இந்திய குறியீட்டின்கீழ் பல்வேறு இலக்குகளின் செயல்திறனை பகுப்பாய்வு செய்கிறது. முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டிய இலக்குகள் மற்றும் அது தொடர்பான இனங்களை அடையாளம் கண்டு அதனை, தொடர்புடைய துறைகளுக்கு தெரிவித்து உரிய தீர்வுகளை காண வழிவகை செய்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ்

புள்ளி விவரங்களை சேகரிக்க இத்துறை பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

**3.2.12 வெளியீடுகள்**

இத்துறையிலிருந்து மாநில, மாவட்ட, வட்டார அளவில் ஏறத்தாழ 500 அறிக்கைகள் பருவ வாரியாக வெளியாகின்றன. அவைகளில் தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்டப் புள்ளிஇயல் கையேடு போன்றவை முக்கிய வெளியீடுகளாகும்.

**3.2.13 தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம், சென்னை**

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக தேவை அடிப்படையிலும் மற்றும் குறிப்பிட்ட சிறப்பு பயிற்சி அளிக்க வேண்டி, தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டு தற்பொழுது அரசால்

ஒப்பளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநர் மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு 01.05.2012 முதல் பொருள் இயல் மற்றம் புள்ளி இயல் துறை தலைமையிட வளாகத்தில் இப்பயிற்சி நிறுவனம் இயங்கி வருகின்றது.

இத்துறை பணியாளர்களுக்கு உரிய கால முறையில் பின்வரும் பயிற்சிகளை பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியுடன் தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம் வழங்கி வருகின்றது.

(i) பொருளாதாரம் மற்றம் புள்ளி இயல் தொடர்பான அடிப்படைக் கருத்துருக்கள், அலுவல் சார்ந்த புள்ளிஇயல் விவரங்கள், அது தொடர்பான நெறிமுறைகள், பகுப்பாய்வு மற்றும் தகவல் பரிமாற்றும் திறன்கள், அறிக்கை தயாரிக்கும் திறன் போன்றவை அறிமுகப் பயிற்சிகள் மூலம் அளிக்கப்படுகிறது.

(ii) தேவை அடிப்படையிலான குறுகிய கால தேசிய மாதிரி ஆய்வு பயிற்சிகள், மாநில வருவாய் கணக்கீட்டு செய்முறைகள், புள்ளி இயல் மென்பொருள் பயன்பாடுகள், மென்பொருள் உருவாக்கம், புள்ளி விவரப் பாதுகாப்பு மற்றும் கணினி மேலாண்மை ஆகியவை நடத்தப்படுகின்றன.

(iii) நிதியாண்டு 2020-21-ல் இந்நிறுவனத்தில் 10 விதமான பயிற்சிகள் 12 தொகுதிகளாக நடத்தப்பட்டு 412 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## 3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 1974 முதல் செயல்பட்டு வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை மதிப்பீடு செய்வதே

இத்துறையின் பணி ஆகும். மத்திய / மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான சான்றுகள் அடிப்டையிலான முடிவெடுப்பதில் மதிப்பீடு ஒரு முக்கிய அங்கமாகும். பல்வேறு திட்டங்களின் செயல்முறை மதிப்பீட்டின் பின்னூட்டம், திட்டங்கள் செயல்படுத்தலில் திருத்தம் செய்ய உதவுகிறது. இதனால் முடிவு செய்யப்பட்ட இலக்குகளை அடையவும், திட்டங்களின் செயல்திறனை பயனுள்ளவகையில் செயல்படுத்த மற்றும் மேம்படுத்தவும் முடியும்.

சமூக நலன், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, நீர்ப்பாசனம், தோட்டக்கலை, வனம், வீட்டுவசதி, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் போன்ற பல்வேறு துறைகளில் இத்துறையானது இதுவரை 786 மதிப்பீட்டாய்வு அறிக்கைகள் முடிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

### 3.3.1 துறையின் முக்கியப் பணிகள்

(i) மத்திய, மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) "தமிழ்நாடு – ஓர் பொருளாதார ஆய்வறிக்கை" ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

### 3.3.2 துறையின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு

திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கண்காணிப்பின் கீழ் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை தனிப்பட்ட முறையில் இயங்கி வருகிறது. இதன் மூலம் முடிக்கப்பட்ட மற்றும் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு இத்துறையே பொறுப்பாகிறது. இத்துறையின் மதிப்பீட்டு ஆய்வுகள், மாநில மதிப்பீட்டுக் குழு (SEC) மற்றும் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB)

ஆகியவற்றின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.3.2.1 மாநில மதிப்பீட்டுக் குழு (SEC)

மாநில மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக செயல்படும் நிதித் துறை, அரசு செயலர், மதிப்பீட்டு ஆய்வுகளின் பட்டியலை முடிவு செய்கிறார். 2021ம் ஆண்டிற்கு இருபத்து ஒன்று மதிப்பீட்டாய்வுகள் இத்துறையால் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### 3.3.2.2 மாநில மதிப்பீட்டு ஆலாசனைக் குழு (SEAB)

மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவானது மாநில திட்டக் குழுவின் துணை தலைவரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது. இக்குழுவில் பல்வேறு கல்வி ஆராய்ச்சிநிறுவனங்கள் மற்றும் மாநில மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர். மேலும் இத்துறையில்

மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு ஆய்வுகளின் செயல்முறையியல்கள் மற்றும் ஆய்வுகளுக்கு இக்குழு ஒப்புதல் அளிக்கிறது. இக்குழு மதிப்பீட்டாய்வுகளின் செயல்முறையியல்களில் உள்ள ஆய்வின் நோக்கங்கள் மற்றும் மாதிரி வரைவு குறித்து கலந்து ஆலோசித்து விவாதித்து முடிவு செய்கிறது. மேலும் முடிக்கப்பட்ட மதிப்பீட்டாய்வின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை விவாதித்து இறுதி செய்கிறது. 2020ஆம் ஆண்டில் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் பத்து மதிப்பீட்டாய்வுகள் மற்றும் பதினான்கு மதிப்பீட்டு செயல்முறையியல்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 3.3.3 செயல்திறன்

2021ஆம் ஆண்டில், அனைத்து (19) மதிப்பீட்டு ஆய்வுகளின் செயல் முறையியல்களுக்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதில் 3 மதிப்பீட்டு ஆய்வுகள் 10.08.2021 அன்று மாண்புமிகு துணைத் தலைவர், மாநில திட்டக் குழு தலைமையில் நடைபெற்ற மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் 16 மதிப்பீட்டு ஆய்வுகளின் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. 27.05.2021 அன்று நடைபெற்ற மாநில மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத்தில், 21 மதிப்பீட்டு ஆய்வுகள் இந்தத் துறையால் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. அதற்கான செயல் முறையியல்கள் ஒப்புதலுக்குத் தயாரிக்கப்பட உள்ளது.

### 3.3.4 ஆய்வுகளை மேற்கொள்வதில் கால வரிசை செயல்முறை

மாநில மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலின் பேரில், மதிப்பீட்டு ஆய்வு இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகிறது. பின்னர், மதிப்பீட்டு

ஆய்விற்கான குறிக்கோள்களை வடிவமைப்பதற்கும் செயல்முறையியல்களைத் தயாரித்து மாநில மதிப்பீட்டு ஆலாசனைக் குழுவில் முன்வைப்பதற்கும் மாதிரி வரைவு குறித்து கலந்து ஆலோசித்து விவாதித்து முடிவு செய்ய இரண்டாம் நிலை தரவுகளை சேகரிப்பதற்கும், செயல்படுத்தும் துறைகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. செயல்முறையியல் ஒப்புதலின் பேரில், முதன்மைத் தரவைச் சேகரிக்க வினாத்தாள் தயாரிக்கப்பட்டு மின்னணு மயமாக்கப்படுகிறது. மின்னணு மயமாக்கப்பட்ட கேள்வித்தாளின் மூலம் அதன் ஓட்டத்தையும் பொருத்தத்தையும் சரிபார்க்க முன்மாதிரி களப்பணி சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

சேகரிக்கப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக மாநில மதிப்பீட்டு ஆலோசனைக்

குழு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன மற்றும் மதிப்பீட்டாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்து பின்தொடர் நடவடிக்கை எடுக்க மாநில திட்டக் குழுவிற்கு அனுப்பப்படுகின்றன.

### 3.3.5 மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு ஆய்வுகளின் வகைகள்

தேவைகள் மதிப்பீடு – ஒரு பிரச்சினையின் தன்மை மற்றும் நோக்கத்தை அடையாளம் காணவும், சிக்கலைத் தீர்க்கத் தேவையான சேவை வழங்கலைத் தீர்மானிக்கவும் மேற்கொள்ளப்படுகிறது.

#### 3.3.5.1 திட்டக் கோட்பாட்டு மதிப்பீடு

திட்டத்தில் உள்ள கோட்பாட்டை மாதிரியாகக் கொண்டு, ஒரு திட்ட உள்ளீடுகளுக்கும் அதன் இறுதி குறிக்கோளுக்கும் இடையிலான காரணப் பாதையை பட்டியலிடுவதை உள்ளடக்குகிறது.

### 3.3.5.2 செயல்முறை மதிப்பீடு

செயல்முறை மதிப்பீடு, வேலைத் திட்டங்களுக்கான மாதிரிகளின் செயல்பாடுகள், செயல்படுத்தல் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றின் செயல்திறனை பகுப்பாய்வு செய்கின்றன. இந்த துறையால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மதிப்பீட்டு ஆய்வுகளும் செயல்முறை பரிமாணத்தைக் கொண்டிருக்கின்றன.

### 3.3.5.3 தாக்க மதிப்பீடு

ஒரு தாக்க மதிப்பீடு, திட்டங்களின் தாக்கத்தையும், அதன் காரணமாக ஏற்படும் முக்கிய விளைவுகளையும் அடையாளம் காட்டுகிறது.

### 3.3.5.4 மதிப்பு விளைவு பகுப்பாய்வு

மதிப்பு விளைவு பகுப்பாய்வானது பல்வேறு திட்டங்களின் வெவ்வேறு சூழ்நிலை மற்றும் காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்ட

செலவுகள் மற்றும் அதன் தாக்கம் குறித்து ஒப்பிடுவதாகும். இவை இரண்டும் ஒரே நோக்கத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 3.3.6 தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் (NFSA)

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் 2013இன் தொடர் மதிப்பீட்டாய்வு செய்வதில் பங்கேற்றுள்ளது. இந்திய அரசாங்கத்தின் உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையை தகுதி அடிப்படையில் தேர்வு செய்தது. இவ்வாய்வானது எட்டு காலாண்டுகளை உள்ளடக்கிய இரண்டு வருட காலத்திற்கு மேற்கொள்ளும் நிகழ்கால மதிப்பீட்டு ஆய்வு ஆகும். ஒவ்வொரு காலாண்டிலும் நான்கு

மாவட்டங்களில், 20 மாதிரி நியாய விலைக் கடைகளிலிருந்து 300 மாதிரி பயனாளிகள் மற்றும் அந்தந்த கடையின் விற்பனை நபர்களும் அடங்குவர். குறை தீர்க்கும் நெறிமுறையை மதிப்பிடுவதற்காக மாதிரியின் ஒரு பகுதியாக நியாய விலை கடை அளவிலான கண்காணிப்புக் குழு மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளனர். அனைத்து மாதிரி மாவட்டங்களிலும் சரக்கு இருப்பு மற்றும் விநியோக அமைப்பு குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டது. வினாத்தாள்கள் இந்திய அரசின் உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் மூலம் வழங்கப்பட்டது. கள ஆய்வு மற்றும் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல் ஆகியவை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின் தரவு

சேகரிப்பு மின்னணு முறை மூலம் செய்யப்பட்டன.

தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் புரிந்துணர்வு ஒப்பந்த காலம் ஜூலை 2018 முதல் ஜூன் 2020 வரையிலான 8 காலாண்டுகளில், 8 ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. நவம்பர் 2020 இல், இறுதி காலாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**3.3.7 ஆய்வுகளுக்கான மின்னணு மதிப்பீட்டு முறை**

மின்னணு மதிப்பீட்டு முறையின்கீழ் துறைக்கான வலைதளம் உருவாக்கப்பட்டது, வன்பொருள் மற்றும் மென்பொருள் தொகுப்புகள் வாங்கப்பட்டுள்ளன. தரமான தரவு சேகரிப்பு மற்றும் தரவு சேகரிப்பு செயல்திறனை மேம்படுத்துவதற்காக, வினாத்தாள் வடிவமைக்க, வரைப்பட்டிகைகளில் வினாக்களை பதிவேற்ற

மற்றும் தரவு சேகரிக்க மென்பொருள் பயன்பாட்டில் துறை பணியாளர்களுக்கு புத்துணர்வு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்துறை மூலம் 2018 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை களப்பணியில் அனைத்து முதல்நிலை விவரங்களும் வரைப்பட்டிகைகளை பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு 22 மதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.3.8 மதிப்பீடு ஆய்வுக்கான வழிகாட்டி முறை

கொள்கை முடிவெடுப்பதில் மதிப்பீட்டின் பங்கை வலுப்படுத்த, பல்வேறு அரசு துறைகளால் மதிப்பீட்டு ஆய்வுகளை வடிவமைத்தல், புரிந்துகொள்வது மற்றும் செயல்படுத்துவதற்கான பொதுவான மதிப்பீட்டாய்வு வழிகாட்டி கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

### 3.3.9 வெளி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள்

வெளி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள் அதிக அளவில் பயனாளியின் தொகுதியும் மற்றும் புவிசார் பரப்பளவின் அடிப்படையிலும் நடைபெறும் ஆய்வு அறிக்கைகளுக்கு அங்கீகாரம் பெற்ற பட்டியலிடப்பட்ட வெளி நிறுவனங்கள் மூலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

### 3.3.10 மேம்பாட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகத்துடனான (DMEO) நோக்க அறிக்கை

ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களின் எதிர்நோக்கும் குறிக்கோள்களை அடைவது குறித்து மதிப்பீடு செய்யும் பணியை நித்தி ஆயோக்கின் கீழுள்ள DMEO செய்து வருகிறது, அதன் முக்கிய குறிக்கோளானது மாநில மற்றும் ஒன்றிய பிரதேசங்களின் கண்காணிப்பு மற்றும்

மதிப்பீடு செய்யும் பணிகளை செம்மைப்படுத்துவதாகும். தமிழக அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது, மேம்பாட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகம், நித்தி ஆயோக்குடன் 08.07.2021 அன்று ஒரு நோக்க அறிக்கையை கையெழுத்திட்டுள்ளது. நோக்க அறிக்கையானது அரசின் கொள்கை மற்றும் திட்டங்களில் கூட்டுறவு முறையிலான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு கட்டமைப்பை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்கிறது. மாநிலத்தில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையானது நோக்க அறிக்கையை செயல்படுத்த ஒருங்கிணைக்கும் துறையாக செயல்படும்.

**4.0 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

சென்னை பெருநகர பகுதி, 87 இலட்சம் மக்கள் தொகையுடன் (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு) 1189 சதுர கீ.மீ

அளவிற்கு பரவியுள்ளது. இது, மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பெருந்திரள் விரைவுத் இரயில் போக்குவரத்து கட்மைப்புகளை கொண்ட ஒரு பரந்த பொதுப் போக்குவரத்து கட்டமைப்பாகும். பெருகி வரும் தேவைக்குத் தீர்வு காண்பதற்கும் போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசினை கட்டுப்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் வாயிலாக பெருந்திரள் போக்குவரத்தை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டமானது, தொலைதூர இரயில்கள் மற்றும் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் விரைவு இரயில் போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய பொது மற்றும் தனியார் போக்குவரத்து அமைப்புகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட விரைவான, பயன் தகுந்த,

திறன்மிக்க மற்றும் நீடித்த பொது போக்குவரத்து முறையாகும்.

**4.1 கட்டம்–I**

வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான வழித்தடமும் சென்னை மத்திய இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான மற்றொரு வழித்தடமும் என இரண்டு வழித்தடங்கள் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டம் 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முதன் முதலாக உத்தேசிக்கப்பட்டது. மாநில அரசு, இத்திட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கி, ஒன்றிய அரசின் நிதியுதவியும் வெளிநாட்டு நிதியுதவியும் பெறுவதற்காக பரிந்துரைத்தது.

ஒன்றிய அரசு, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், முதல் கட்டத்தின் கீழ், இரண்டு வழித்தடங்களை செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை வழங்கியது. இத்திட்டப் பணியில், 45.1 கி.மீ மொத்த நீளத்தில் இரண்டு வழித்தடங்களை 14,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் கூட்டு முயற்சி அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றிய அரசு, திட்டத்திற்கு ஆகும் செலவின் 15 விழுக்காட்டை சமவீத பங்காகவும், 5.78 விழுக்காட்டை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள 59.22 விழுக்காட்டு தொகையை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (Japan International Cooperation Agency) கடனுதவியாக வழங்கியது.

முதல் கட்டத்தின் வாயிலாக ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ இரயில் நிலைய வழித்தடங்களின் விவரங்கள் வருமாறு:

| **வழித்தடங்கள்** | **உயர்த்தப் பட்டவை** | **சுரங்கப் பாதை** | **மொத்த ம்** |
|---|---|---|---|
| வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையில் (கி.மீ) | 8.8 | 14.3 | 23.1 |
| சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையில் (கி.மீ) | 12.3 | 9.7 | 22.0 |
| **மொத்த நீளம் (கி.மீ)** | **21.1** | **24.0** | **45.1** |
| மெட்ரோ இரயில் நிலையங்களின் எண்ணிக்கை | 13 | 19 | 32 |

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நிறுவனங்கள் சட்டத்தின்படி ஒருங்கிணைக்கப்பட்ட சிறப்பு நோக்குத் திட்டமாக செயல்படுத்தி வருகின்றது. அதன் பின்னர், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற சமபங்கு வீதத்தில் இந்த நிறுவனம்

கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி, ஒன்றிய அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் அரசு செயலாளரை, தலைவராக கொண்ட ஐந்து இயக்குநர்களை நியமனம் செய்தது. அதே போன்று, மாநில அரசு மேலாண்மை இயக்குநர் உட்பட ஐந்து இயக்குநர்களை நியமித்தது. ஒருங்கே, மூன்று செயல் இயக்குநர்களும், இரண்டு தனிப்பொறுப்பு இயக்குநர்களும் உள்ளனர்.

### 4.2 திட்டப்பணி நிதியுதவி

இதுநாள் வரை, தமிழ்நாடு அரசு 2858.00 கோடி ரூபாயை சமவீத பங்காகவும், 2834.22 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. ஒன்றிய அரசு, 2190.00 கோடி ரூபாயை சமவீத பங்காகவும், 730.00 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும்

வழங்கியுள்ளது. நேரடியாகச் செல்லும் நிதியுதவியாக (ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின்) முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய கடன் தொகை 8646.00 கோடி ரூபாய் பெறப்பட்டது. முதல் கட்டத்தின் திருத்திய செலவு மதிப்பீடு 18,380 கோடி ரூபாயாகும். இதற்கான ஒப்புதல் ஒன்றிய அரசின் கருத்தாய்வில் உள்ளது.

**4.3 பயணியர் சேவை**

முதல் கட்டத்தின் கீழ் பயணியர் சேவைகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு நிலைகளில் தொடங்கி வைக்கப்பட்டன.

| தொடங்கி வைக்கப்பட்ட நாள் | கி.மீ | வழித்தடப்பகுதி |
|---|---|---|
| 29-06-2015 | 10.15 | கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையில் (உயர்த்தப்பட்டவை) |
| 21-09-2016 | 8.60 | சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையில் (உயர்த்தப் பட்டவை) |

| | | |
|---|---|---|
| | 1.20 | ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் (உயர்த்தப்பட்டவை) |
| 14-05-2017 | 7.40 | கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையில் (சுரங்கப்பாதை) |
| 25-05-2018 | 2.50 | நேரு பூங்கா முதல் சென்னை மெட்ரோ இரயில் வரையில் (சுரங்கப்பாதை) |
| | 4.35 | சின்னமலை முதல் ஏஜி-டிஎம் எஸ் வரையில் (சுரங்கப்பாதை) |
| 10-02-2019 | 10.90 | ஏஜி-டிஎம் எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையில் (சுரங்கப்பாதை) |
| **மொத்தம்** | 45.10 | |

## 4.4 கட்டம் –I இன் நீட்டிப்பு

தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – I இன் வழித்தடம் – 1 வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில் 9.051 கி.மீ நீளத்திற்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டக் கருத்துரு தேவைப்படும் சட்டப்படிக்கான ஒப்புதல், நிதியுதவி மற்றும் ஜப்பான் பன்னாட்டு

கூட்டுறவு முகமையிடமிருந்து வெளிநாடு நிதியுதவி ஆகியவற்றிற்காக 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தை 3770 கோடி ரூபாய் மதிப்பீட்டு செலவில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 15.06.2016 அன்று வழங்கியது. மேலும், கட்டுமானப் பணிகள் 23.07.2016 அன்று தொடங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு, சமபங்குத் தொகையாக 508.00 கோடி ரூபாயும் சார்நிலைக் கடனாக 599.27 கோடி ரூபாயும் கட்டம் – I இன் விரிவாக்கத் திட்டத்திற்காக வழங்கியுள்ளது. அதே போன்று, ஒன்றிய அரசு பங்கு மூலதனமாக 508.00 கோடி ரூபாயும் சார் நிலைக் கடனாக 205.00 கோடி ரூபாயும் வழங்கியுள்ளது. நேரடியாகச் செல்லும் நிதியுதவியாக 2141.00 கோடி ரூபாய் (ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு

முகமையின் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய கடன்) பெறப்பட்டது.

இவ்விரிவாக்க வழித்தடத்தில் 14.2.2021 அன்று பயணிகள் சேவை தொடங்கப்பட்டன. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ், 54.1 கி.மீ நீளம் கொண்ட கட்டம் – I முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**4.5 கட்டம்–II**

திருவாளர்கள் ரைட்ஸ் லிமிடெட் (M/s. Rites Limited) நிறுவனத்தால் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–II ற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. மொத்தம் 107.55 கி.மீ நீளத்திலான மூன்று வழித்தடங்களான (i) மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையிலும் (பழைய மாமல்லபுர சாலையையொட்டி) (ii) கலங்கரை விளக்கம் முதல் கோயம்பேடு புறநகர் பேருந்து முனையம் வரையிலும் (iii) மாதவரம் முதல் சோழிங்கநல்லூர்

வரையிலும் (கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் வழியாக) முதலாவதாக முன்மொழியப்பட்டன. தமிழக அரசின் கட்டம்–II இன் விரிவான திட்ட அறிக்கைக்கு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதிப் பங்களிப்பிற்காகவும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவிக்காக பரிந்துரைத்தது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகரப் பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில், கட்டம் – II இல் உள்ள வழித்தடங்களில் ஒன்றான வழித்தடம்–4 ஐ கலங்கரை விளக்கத்திலிருந்து வடபழனி மற்றும் போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பதற்கு அரசு முடிவு செய்தது.

மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–II ற்கு கொள்கையளவிலான ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசு வழங்கியது. கட்டம் – II திட்டம் 69,180 கோடி ரூபாய் திட்டச் செலவு மதிப்பீட்டில், திருவாளர்கள் ரைட்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி செயல் படுத்துவதற்கு, ஒன்றிய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை பரிந்துரைக்கப்பட்டது.

**4.6 கட்டம்–II வழித்தடங்களின் விவரங்கள் பின்வருமாறு**

- **வழித்தடம்–3** : மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையுள்ள (45.8 கி.மீ) – வடக்கு –

தெற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில், மென்பொருள் வழித்தடம், அடையார், மயிலை மற்றும் புரசைவாக்கம் போன்ற முக்கியப் பகுதிகள் இணைக்கப்படுகிறது;

- **வழித்தடம்–4** : கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலையானது (26.1 கி.மீ) – கிழக்கு மேற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில் நகரின் வணிகப் பகுதிகளான நந்தனம், தியாகராயநகர், வடபழனி, போரூர் மற்றும் பூவிருந்தவல்லி ஆகியவை இணைக்கிறது;
- **வழித்தடம்–5** : மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை (47.0 கி.மீ) – சுற்று வட்ட வழித்தடமான இவ்வழித்தடத்தில் வில்லிவாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், இராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகிய பகுதிகள் இணைக்கப்படுகிறது;

இரண்டாம் கட்டத்தில் கருதப்பட்டுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வழித்தடங்கள் | உயர்த்தப்பட்ட இரயில் நிலையங்கள் | சுரங்கப் பாதை இரயில் நிலையங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| வழித்தடம்–3 | 20 | 30 | 50 |
| வழித்தடம்–4 | 18 | 12 | 30 |
| வழித்தடம்–5 | 42* | 6 | 48 |
| மொத்தம் | **80** | **48** | **128** |

* ஒரு நிலையம் தரைமட்டத்தில்

வழித்தடம்–3 இல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67கி.மீ), வழித்தடம்–5இல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் வரையிலும் (16.34கி.மீ) – மொத்தம் 52.01 கி.மீ நீள வழித்தடத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவி வழங்குகிறது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையுடன் 2018ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்

கடன் வழங்கத் தயாராக உள்ளது. கடன் தொகையின் முதல் தவணை 75,519 மில்லியன் ஜப்பான் பணமதிப்பில் (சுமார் 4770 கோடி ரூபாய்) ஆகும். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரையில், இத்திட்டத்தைத் தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியளிக்கும் வழித்தடப்பகுதிகளை 40,941 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாநில அரசு வழங்கியது.

கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை வரையிலான (26.1 கி.மீ) வழித்தடம்–4, வழித்தடம்–3இல் சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி (சிப்காட்) வரை (10.13 கி.மீ) மற்றும் வழித்தடம்–5 இல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான (30.66 கி.மீ)

எஞ்சிய வழித்தடப்பகுதிகளை செயல் படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதியுதவி பெறுவதற்கான ஆலோசனை நடைமுறைகள் நன்கு விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரை, இத்திட்டத்தை தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், வழித்தடம்–4 முழுமையாகவும் வழித்தடம்–3 மற்றும் வழித்தடம்–5 இல் எஞ்சிய வழித்தடப்பகுதிகளையும் 25,750 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

இதனிடையே, மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான செலவு மதிப்பீட்டு அளவுகோல் குறித்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின்

ஆலோசனைகளின் அடிப்படையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II இன் செலவு மதிப்பீடு 61,843 கோடி ரூபாயாக (கட்டுமான காலத்திற்கான வட்டி மற்றும் முன் இறுதிக்கட்டணம் நீங்கலாக) திருத்தியமைக்கப் பட்டுள்ளன. திருத்திய செலவு மதிப்பீடு ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மண் பரிசோதனைகளைத் தொடங்குவதற்கும் விரிவான வடிவமைப்புத் தயாரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு அரசு ஏற்கனவே அனுமதியளித்துள்ளது. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்கள் மற்றும் சுரங்கப்பாதை மற்றும் நிலத்தடி இரயில் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை சென்னை மெட்ரோ இரயில்

நிறுவனம் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. சில வழித்தடப் பகுதிகளில் கட்டுமானப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–I –ற்கு ஒப்புதல் வழங்கியது போன்று, 50:50 சம பங்கீட்டு அடிப்படையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – II முழுவதற்கும் அனுமதியளிக்குமாறு 08.01.2019 ஆம் நாளன்று, மாநில அரசு, ஒன்றிய அரசை அணுகியுள்ளது. ஒன்றிய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**4.7 பிற திட்டங்கள்**

**4.7.1 கட்டம்–I இன் நீட்டிப்பு – விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை**

சென்னை மெட்ரோ இரயில் வழித்தடம்–1ஐ விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை

தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இப்பணியை திருவாளர்கள் ஏஇகாம் (M/s. AECOM) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு விரிவான அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 4.7.2 இரயில் வழித்தட இணைப்பு – தாம்பரம் முதல் வேளச்சேரி வரை

தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான இரயில் வழித்தட இணைப்பிற்காக சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அந்நிறுவனம் இப்பணியை திருவாளர்கள். சிஸ்ட்ரா (M/s. SYSTRA) நிறுவனத்திற்கு

வழங்கியுள்ளது. இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**4.7.3 கோயம்புத்தூர் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டம்**

கோயம்புத்தூர் நகருக்கான பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு அரசு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. ஜெர்மானிய நாட்டின் நிதியுதவி முகமையான கே.எப்.டபுள்யூ–வின் (KfW) (ஜெர்மன் வளர்ச்சி வங்கி) நிதியுதவியுடன் கோயம்புத்தூர் நகரில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டத்தை செயல் படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையை உருவாக்கும் பணியை

திருவாளர்கள் சிஸ்ட்ரா மற்றும் ரைட்ஸ் லிமிடெட் கூட்டமைப்பிற்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வழங்கியுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கை தொகுக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கையை உருவாக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 4.7.4 இரண்டாம் நிலை நகரங்கள்

மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்து திட்டங்களை செயல் படுத்துவதற்கான சாத்தியக் கூறு அறிக்கைகளை உருவாக்குமாறு அரசு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் விரைந்து முடிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
**நிதி மற்றும் மனித வள**
**மேலாண்மைத் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.